
# ஜீவ மன்னா

JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER



## அனுதினமும்

**2016 ஜிலை**

58 வது வெளியீடு

"அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை."

புலம்பல் 3:33

அட்டைப் படத்தின் கதை உட்புறத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அட்டைப்பட விளக்கம்

## அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!

இம்முறை அட்டைப் படத்தில் நீங்கள் காண்பது கடந்த சில தினங்களுக்கு முன்னதாக இடைவிடாமல் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ள அபாயமும் மண்சரிவும் அதனால் பாதிக்கப்பட்ட ஜனங்களை மீட்டுக் கொள்ளும் புகைப் படங்களையே ஆகும். சென்ற மாதம் நாம் எமது ஜீவ மன்னா வெளியீட்டினை தொகுத்து முடிவடைந்ததன் காரணமாக இவைகளை பிரசுரிக்க முடியாமற் போய் விட்டது. எனக்குக் கிடைத்த (வேன்) வாகனத்தின் படம் பிரசுரிக்கப்பட்டது தேவனின் நாமம் மகிமைப்பட வேண்டும் என்பதற்கேயொழிய என்னைக் குறித்து பாராட்டும்படியாக அல்ல.



ஏன்? இவ்வண்ணமான தீமையான காரியங்கள் தேசத்திற்குள் நடை பெறுகின்றதென நீங்கள் எண்ணக் கூடும். தெய்வம் இவ்வுலகை ஆளுகை பண்ணுகின்றது என கிறிஸ்தவ [illegible]தர்கள் கூறுவாராகில் (தேவ வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது). இவ்வாறானவைகள் நிகழ்கின்ற போது அவர் என்ன செய்கிறார் என நீங்கள் நினைக்கக் கூடும்.



ஏற்ற காலத்தில் மழையைப் பெய்விப்பது யார்? அறுவடைக் காலத்தில் மழையை நிறுத்துவது யார்? ஏற்ற காலங்களில் அவ்விருட்சங்களில் பழங்களை உருவாக்குவது யார்? தேசத்தில் பஞ்சம், வறட்சி ஏற்படாத வண்ணமாகவும் இயற்கையாக நடை பெறுகின்ற நிகழ்வுகளை ஒழுங்கு முறையாக செயல்படுத்துவது யார்? காலை 5.45க்கும் 6 மணி வரைக்கும் [illegible]டயில் சூரியனை உதயமாகச் செய்வது யார்? மாலை 5.30க்கும் 6 [illegible]க்கும் இடையில் சூரியனை மறையச் செய்வது யார்?

வேதாகமத்தில் ஓசியா 4:1இல் 'இஸ்ரவேல் புத்திரரே கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். தேசத்துக்கு குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது. அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இரக்கமும் இல்லை தேவனைப்பற்றிய அறிவும் இல்லை' என எழுதப்பட்டுள்ளது.



மேலே கூறப்பட்டுள்ள தேவ வசனத்தின்படி முழு உலகையும் நிர்வகிக்கின்ற சர்வபராக்கிரமிக்க தேவனொருவர் இருக்கின்றார் என்பதும் முழு உலகினையும் ஆளுகை பண்ணுகிறார் என்பது தெளிவாகின்றது. ஆகையால் சுமார் 2 கோடியே 3 இலட்சம் அளவில் வாழ்கின்ற எமது ஈழ நாட்டின் எழுப்புதலுக்காக [illegible] படத்தின் பின்பக்கத்தில் உட்புறத்தில் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை இயேசு ராஜனுக்கே

## ஆசிரியர் உரை

### கர்த்தர் செய்ய நினைத்தது ஒரு போதும் தடைபடாது !

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இயேசுகிறிஸ்துவின் முடிவில்லா இரக்கத்தினால் நாம் ஜீவ மன்னா தினமஞ்சரியின் 58வது வெளியீடு வரை தொகுத்து அறிந்திருக்கின்றேன். அவருக்கே எமது முழு உள்ளத்தோடு நன்றியையும், துதிகளையும் செலுத்துகிறோம். சகரியா 4:10இல் அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணுவான் என கூறியுள்ளதன்படி ஜீவ மன்னா தின மஞ்சரியை 1000 புத்தகங்களாக ஆரம்பித்து இன்று சிங்களம், தமிழ், இரண்டு மொழிகளிலும் சுமார் 25,000 புத்தகங்கள் வரை அனுப்பி வருகின்றோம்.

தேவ பிள்ளைகளே! கடந்த காலங்களில் இலங்கை முழுவதும் ஏற்பட்ட கோர வெள்ளப் பெருக்கின் காரணமாகவும், மண்சரிவின் காரணமாகவும் 200 பேர்கள் மடிந்து விட்டார்கள். சுமார் 2,00000 பேர்கள் இருப்பிடங்களை இழந்து விட்டதாக ஊடகங்களுக்கூடாக அறிந்தோம். பரிசுத்த வேதாகமத்தில் ஓசியா 4:1இல் இஸ்ரவேல் புத்திரரே கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். தேசத்துக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது. அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை, தேவனைப் பற்றிய அறிவும் இல்லை என்றாகும். இயற்கையை ஆளுகை பண்ணும் தேவனின் கிரியைகளை யாரால் தடுத்து நிறுத்த முடியும். தேவனின் வருகை ஒரு நொடிப் பொழுதில் நிகழும் என்பதால் தேவ பிள்ளைகளே ஆயத்தப்படுங்கள்.

ஜீவ மன்னா வெளியீடுகளை ஆத்மீகரில்லாத உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் கொடுத்து சுவிஷேசத்தை அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். உலகமெங்கும் சுவிஷேசம் அறிவிக்கும் தீவிர பணியில் நீங்களும் எங்களோடு இணைந்துக் கொள்ளுங்கள். எமக்கு மன்னா கட்டணங்களையும், காணிக்கைகளையும் அனுப்பி முன்னோக்கிச் செல்ல உதவி செய்யும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (தேசம் முழுவதும் ஏற்றபட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக ஜீவ மன்னா வெளியீடுகள் அனுப்புவதில் தாமதமாகி விட்டது.)

| | |
|---|---|
| பார்வோனின் சேனைகளை அழித்த ஜோர்தான் | வெள்ளம் ! |
| பாவிகளை அழிக்க நிரம்பிய நோவாவின் | வெள்ளம் ! |
| பாவத்தில் மீள மன்னாவின் தேவ வசன | வெள்ளம் ! |
| பார் முழுவதும் பரிசுத்தமாக்கும் இயேசுவின் இரத்த | வெள்ளம் ! |

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
*இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்*

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
01 வெள்ளி

# அற்பமான ஆரம்பத்தை சம்பூரணப்படுத்தும் தேவன்!

வேதவாசிப்பு
பிலிப்பியர் 04
கொலோ: 01

"உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்." (யோபு 8:7)

ஜீவிக்கின்ற தேவனாகிய **இயேசுகிறிஸ்துவினால் உலகில் வேறுபிரிக்கப்பட்ட** என் **தேவ பிள்ளைகளே! மாதத்தின் முதல் நாளான இன்று அவரின் உன்னத பெலனைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றேன். உபாகமம் 28:10**இல் **'கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு உனக்குப் பயப்படுவார்கள்'** என்று உரைக்கப்பட்டுள்ளது. இதன் விளக்கமாவது தேவன் எம்மைத் தேர்ந்தெடுத்தது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **எம்மை ஆசீர்வதிக்கும்படியாகவேயாகும்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **யோபு 8:7**இல் எழுதியிருப்பதாவது, **'உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்'** என்றாகும். இந்த தேவ வசனம் சம்பந்தமாக உங்களுக்கு எனது வாழ்வின் சாட்சியைக் கூற விரும்புகின்றேன். நான் தனி ஊழியத்தை ஆரம்பித்த நாட்களில் எனது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்பிக்கொள்ளக் பணம் கூட இல்லாதபடி மிகக் கஷ்டத்தோடு கடந்து வந்தேன். ஒரு நாள் சகோதரன் **தேஜா கமகே என்பவரைச் சந்தித்த போது அவருடைய ஒரு காரியத்தின் நிமித்தமாக ஜெபித்தேன். அந்த காரியம் நிறைவேறியதன் காரணமாக எனது விபரங்களைக் கேட்டு எனது தனி ஊழியத்தை ஆரம்பிக்க இடமொன்றைத் தந்தார்.** இப்படியாக எனது குடும்பத்தாரோடும், இரண்டு விசுவாசிகளோடும் எனது ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது.

தேவ பிள்ளைகளே! **அன்று ஆரம்பித்த ஊழியத்தை 15 ருடக்காலமாக முன்னோக்கி நடத்திக் கொண்டு வருகின்றோம்.** அன்று க **செலவுக்கு 50 ரூபாவாவது இல்லாமலிருந்தது.** ஆனால் இன்று இவ்வாறாக வளர்ந்திருப்பதற்குக் காரணம் எனது தேவன் இயேசுகிறிஸ்து என்னோடிருந்து எனது ஊழியத்தை ஆசீர்வதித்தபடியினாலேயாகும். நீங்களும் விசுவாசத்தை விசாலமாக்கிக் கொள்ளுங்கள். **உங்கள் வாழ்க்கையை எல்லா வழிகளிலும் ஆசீர்வதித்து உங்களை வழி நடத்த தேவனால் முடியும். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! இன்றைய தேவ வசனத்திற்காக ஸ்தோத்திரம்! என் வாழ்வில் சிறிய ஆரம்பத்தை விசாலமாக்கி ஆசீர்வதிக்கும் தேவன் என்பதால் ஸ்தோத்தரிக்கின்றேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்." (உபாகமம் 28:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

02 சனி

**நீங்கள் பெரிதான அதிசயங்களைக் காண ஆயத்தப்படுங்கள்!**

வேதவாசிப்பு

கொலோ: அதி: 02 – 03

**"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்."** (பரி.யோவான் 1:50)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளும் உங்களுக்கொரு அசீர்வாதமான நாளாக இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவ குமாரனாக உலகில் அவதரித்த இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவனுள்ளவராக கிரியை செய்கின்றார். தேவன் உங்கள் இரட்சகர் என முழு உள்ளத்தோடு ஏற்று விசுவாசிக்கின்றபடியால் இன்றும் **நீங்கள் மிக அதிர்ஷ்டக்காரர்கள்!** ஆவீர்கள்.

தேவ பிள்ளைகளே! தேவனை விசுவாசிப்பவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். ஏனென்றால் **பரி.யோவான் 14:1**இல் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** தேவனிடத்தி விசுவாசமாயிருங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. ஆகையால் நீங்கள் தேவன் பேரில் விசுவாசம் கொண்டவராகவிருப்பின் மிக அதிர்ஷ்டசாலியென மீண்டும் கூறுகின்றேன். இயேசுகிறிஸ்து எங்களை அவரது பிள்ளைகளாக்கிக் கொண்டு **'அவரது நாமத்தில் நாம் எதைக் கேட்டாலும் அதைத் தருவதாக பொருத்தனை பண்ணியுள்ளார்' (பரி.யோவான் 14:14).** ஆகையால் **"பிரச்சினைகளுக்கு மத்தியில் இன்று வாழ்கிறேன்"** எனவும், **எனக்கு உபத்திரவங்கள் அநேகம் என வேதனைப்படாதீர்கள்.**

தேவ பிள்ளைகளே! என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என எமக்கு வாக்களித்திருக்கும் இயேசுகிறிஸ்து நீங்கள் அவரது நாமத்தை பிரஸ்தாபப்படுத்தி ஜெபம் பண்ணுகையில் உங்கள் பிரச்சினைகள் உபத்திரவங்ளிலிருந்து இயேசுகிறிஸ்து உங்களை விடுதலை செய்வார். **பரி.யோவான் 1:50**இல் இயேசுகிறிஸ்து (நாத்தான் - வேலுக்கு) கூறியது **'அவரது வசனத்தை விசுவாசித்தபடியால் இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றாகும். நீங்களும் இயேசுகிறிஸ்துவின் வசனத்தை விசுவாசித்து பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.' வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்கூடாக உங்கள் அன்பை வெளிப்படுத்தினீர்கள். அவருக்கூடாக தரிசனங்களைக் கற்றுக் கொடுத்தீர்கள். ஆகையால் அனைத்து வசனங்களையும் விசுவாசித்து வாழ்வில் வெற்றி பெற உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்." (பரி.யோவான் 11:40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
03 ஞாயிறு

## உங்களைப் பகைக்கிறவர்களை மன்னித்து ஜெபியுங்கள்!

வேதவாசிப்பு
கொலோ: 04
1 தெசலோ: 01

**"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது."** (பரி.யோவான் 15:19)

அன்பார்ந்தவர்களே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உலகம் தர முடியாத சந்தோஷத்தைப் நீங்கள் பெற்று மகிழ்ந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன்.** ஒவ்வொருவரையும் இயேசுகிறிஸ்து உலகில் தேர்ந்தெடுத்து தம்மிடமாய் அழைத்துக் கொண்டமையால் நாம் தேவ பிள்ளைகளாக தேவ இராஜ்யத்திற்கு உரிமையைப் பெற்று இருக்கின்றோம் என்பதால் **மிக அதிர்ஷ்டக்காரர்களாவோம்!**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட தேவ வசனத்தில் இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கூறுவது, **'நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துக் கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது என்பதாகவே'.** அதிலிருந்து நாம் புரிந்துக் கொள்வது எங்களுக்கு உலகில் உபத்திரவம் ஏற்படுகிறது என்பதையல்லவா? நாம் இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைத்து, எம் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்து, அவரின் விருப்பத்தைப் போல் உலகில் வாழ முயற்சிக்கின்றோம். அப்பொழுது எங்கள் வீட்டார், அயலவர், உறவினர், நண்பர் யாவரும் எமது மாறுபாட்டைக் கண்டு அவர்களை விட்டுத் தூரமாகி விட்டதாகக் கூறலாம். ஏனென்றால் **இயேசுவுக்குள் வாழும் நாம் வாழ்வில் செய்த பழைய தவறுகள், அநீதிகள், மாம்சக் கிரியைகளை மீண்டுமாக செய்ய முடியாது.**

தேவ பிள்ளைகளே! நாம் தேவ வசனத்தைக் கடைப்பிடித்து அதன்படி வாழ்வதினாலே அவ்வாறு நடைபெறுகின்றது. அப்படியாக எமது வாழ்வில் மாற்றங்கள் ஏற்படும் போது **நாம் அவர்களை விட்டு விலகி சிறுமைப்படுத்துகின்றோமென எம்மைப் பகைக்க ஆரம்பித்து விடுகின்றார்கள்.** அவ்வாறான கிரியைகளைக் கண்டு பயப்படாதீர்கள். அவர் உங்கள் மேல் கோபங் கொண்டாலும் நீங்கள் சமாதானமாக இருங்கள். அவர்களும் இயேசுகிறிஸ்துவினித்திற்கு வரும்படியாக ஜெபம் பண்ணுங்கள். அதுவே **உங்கள் ஆசீர்வாதமாகும். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

கிருபை நிறைந்த நல்ல இயேசுவே! இயேசுகிறிஸ்துவிடம் என்னை நீங்கள் அழைத்துக் கொண்டமையால் எல்லோரும் எம்மைப் பகைக்கிறார்கள். அவர்களுக்காக ஜெபம் பண்ண எனக்குதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

இன்றைய வாக்குத்தத்தம்

"பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால்,..." (ரோமர் 12:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
04 திங்கள்

**உபத்திரப்படுகிறவனுடைய உபத்திரவத்தை அற்பமாய் எண்ணாத தேவன்!**

வேதவாசிப்பு
01 தெசலோனி:
அதி: 02 - 03

**"எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார்."** (சங்கீதம் 18:6)

பிரியமானவர்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எம்மேல் எல்லையில்லாத அன்பைக் கொண்டிருக்கும் ஜீவிக்கின்ற தேவன் இன்றும் எம்மோடிருக்கிறார். அவரது சொந்த அபிப்பிராயத்தின்படி தேர்ந்தெடுத்த **தன் பிள்ளைகளை ஒரு போதும் கைவிடாது எமது துக்கத்திலும், சந்தோஷத்திலும், உபத்திரவத்திலும் எம்மோடிருக்கும் தேவனாவார்.**

தேவ பிள்ளைகளே! தேவன் எமக்கு கூறுவது, **'ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய்'** என்றாகும் **(சங்கீதம் 50:15).** ஆவிக்குரிய பிள்ளைகளாகிய எமக்கு திடீர் விபத்துக்கள் ஏற்படலாம், ஆனாலும் அவைகள் ஏற்படும் போது தேவனை கூப்பிடுவது அவசியமாகும். ஏனென்றால் எமது தேவன் நாம் மரணிக்கும் வரை மரணத்தின் பின்னரும் எங்களை ஒரு போதும் கைவிடாதவர் ஆகையால் விஷேடமாக **எங்கள் ஆபத்துக்காலத்தில் எம்மோடிருந்து எங்களைக் காத்துக் கொள்வார்.** மேலே கூறப்பட்ட **சங்கீதம் 18:6**இல் **'தாவீது ராஜா கூறுவது எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன். ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார்'** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! பெரும்பாலாக ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு, அல்லது அவரது குடும்ப அங்கத்தினர் யாருக்காயினும் ஒரு திடீர் விபத்து ஏற்படின் தேவனைக் குறித்து மனக்குழப்பம் ஏற்படும். **ஐயோ தேவனின் பிள்ளையாகவிருந்தும் எனக்கு ஏன் இவ்வாறாக நடந்தது என நினைத்து துக்கப்பட்டு விசுவாசத்தை இழந்து பின்னோக்கி போய் விடுவார்கள்.** ஆனாலும் நீங்கள் அவ்வண்ணமாயிராதீர்கள். உங்களுக்கு ஆபத்து ஏற்படின் இன்னும் அதிகமாக தேவனை கூப்பிடுங்கள். **தேவன் உங்களை மீட்டிடுவார். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் பரிசுத்தமுள்ள பிதாவே! எனது ஆபத்தில் நீங்கள் என்னை நீங்கள் கைவிடாது என்னோடு இருப்பதனால் ஆபத்தில் எனக்கு உபகாரஞ் செய்கின்ற தேவன் என்பதாலும் ஸ்தோத்திரம்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்." (சங்கீதம் 22:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
05 செவ்வாய்

## உங்கள் உள்ளத்தில் ஏவுதல் அளிக்கும் சாத்தானுக்கு இடமளிக்காதீர்கள்!

வேதவாசிப்பு
1 தெசலோனி:
அதி: 04 - 05

**"சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, ..."** (பரி.யோவான் 13:2)

பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தேவ பிரசன்னம் உங்கள் இல்லத்தில் நிறைந்திருக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் அதிகாலை எழுந்து தேவ சமுகத்தில் ஜெபித்து தேவ பிரசன்னத்தில் நிறைந்திருந்து **உங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்தீர்களெனின் தேவன் உங்களைப் பாதுகாத்து நாள் முழுவதும் உங்களோடிருப்பாராக!** ஆகையால் இன்றும் அவர் உங்களது சகல காரியங்களிலும் உங்களுக்கு வழியைக் காட்டி முன்னோக்கிக் கொண்டு செல்வார்.

தேவ பிள்ளைகளே! படைப்பின் ஆரம்பத்திலேயே தேவனின் உன்னத படைப்பான மனிதனுக்கு விரோதமாக சாத்தான் கிரியை செய்தான். தேவன் ஏதேன் தோட்டத்தை உருவாக்கி ஆதாமை அங்கே இருக்கச் செய்தார். அதன் பிறகு கர்த்தர் அவனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். **ஆனாலும் "நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதியாகமம் 2:17).** ஆனாலும் **சாத்தான் எல்லா தந்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவனாகையால் ஸ்திரியான ஏவாளையும் ஏமாற்றி தோட்டத்தின் விலக்கப்பட்ட கனியை புசிக்கும்படியாக உள்ளத்தில் ஏவினான்.**

தேவ பிள்ளைகளே! அவள் மாத்திரமன்றி அவளோடிருந்த ஆதாமுக்கும் அந்தக் கனியைக் கொடுத்தாள். அவனும் அதை உண்டான். மேலே கூறப்பட்ட **பரி.யோவான் 13:2**இல் எழுதப்பட்டுள்ளதாவது, **'இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கும்படி சீமோனின் மகனான யூதாஸ் காரியோத்துவின் இருதயத்தைத் தூண்டி விட்டான்'** என்றே. இன்றும் **தேவ வசனங்களுக்கு விரோதமாக எங்கள் உள்ளத்தில் சாத்தான் கிரியை செய்கிறான்.** அத்தோடு தேவன் எமக்கு வைத்திருக்கிற திட்டங்களுக்கு விரோதமாக சாத்தான் உள்ளத்தில் கிரியை செய்கிறான் என்பதை மறவாதீர்கள். **"முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்"** என **பரி.மத்தேயு 24:13**இல் எழுதப்பட்டுள்ளது. சாத்தானை வென்று தேவ வசனத்தின்படி ஜீவியுங்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

அன்பின் கர்த்தாவே! ஏவாளின் இருதயத்தை தூண்டி விட்ட சாத்தான் இன்றும் எங்களுக்கு விரோதமாக உலகில் இருப்பதால் நாம் ஏமாறி விடாதபடி காத்துக் கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

-ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." (யாக்கோபு 4:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜுலை
**06** புதன்

# உங்கள் பெலவீனங்களைக் குறித்து வேதனையடையாதீர்கள்!

வேதவாசிப்பு
2 தெசலோனி: அதி: 01 - 02

**"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்."** (2 கொரிந்தியர் 12:9)

அன்பார்ந்தவர்களே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம் உங்களுக்கு நித்திய கனமகிமையைக் கொடுக்க வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனிடமிருந்து **எங்களுக்கு கிடைக்கும் கிருபையோ மிக அளப்பரியது.** அதை விலைக் கொடுத்து வாங்க இயலாததோடு வசனத்தில் கூறி முடியாதது. அவ்வளவாக தேவனின் கிருபை அளவற்றதாக இருக்கின்றது.

தேவ பிள்ளைகளே! நானும், நீங்களும் பாவத்தில் மீட்கப்பட்டது அவரது மகா இரக்கத்தினால் அல்லவா? **உண்மையிலேயே எமது வாழ்வில் இறுதி மூச்சு வரை அவரது இரக்கம் எமக்குக் கிடைக்கின்றது என்பதை விசுவாசியுங்கள்.** மேலே கூறப்பட்ட தேவ வசனத்தில் இயேசுவின் சீஷரான பவுலடியார் கூறுவது, அவரது வாழ்வில் அவரது பலவீனத்தின் போது தேவன் உதவி செய்து பெலப்படுத்தினார் என்பதையே. பவுலடியார்க்கு மாத்திரமன்றி உங்களுக்கும் எனக்கும் அப்படியே அதற்கும் மேலாக தேவன் உதவி செய்வார். ஆனாலும் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். **உங்கள் பலவீனத்தில் தேவனின் பெலத்தைத் தரும்படியாக விண்ணப்பியுங்கள். அப்போது தேவன் உங்களை பெலப்படுத்தி உங்கள் பலவீனத்திலிருந்து மீட்டுக் கொள்வார்.**

தேவ பிள்ளைகளே! உங்களைத் தேவன் தெரிந்துக் கொண்டமையால் உங்களைக் குறித்த சகல காரியங்களையும் தேவன் அறிவார். இன்று நீங்கள் உங்களால் தாங்க முடியாத பிரச்சினையில் நொறுக்கப்பட்டு இருக்கின்றீர்களா? வெட்கப்படுத்தும் காரியங்கள் உங்களைச் சூழ்ந்துள்ளதா? ஆனாலும் **பயப்படாதீர்கள்! நீங்கள் இடைவிடாது தேவ கிருபையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.** நீங்கள் பயப்படாது அனைத்திற்கும் முகங் கொடுக்க அவற்றில் வெற்றிபெற தேவ கிருபை உங்களுக்கு போதுமானது மிகுந்த சந்தோஷத்தோடு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க தேவ பலன் உங்களோடு கூட இருப்பதாக **இன்று மனமகிழ்ச்சியின் நாள்!**

**ஜெபம்**

என் பரலோக பிதாவே! நீங்கள் என்னை உருவாக்கின தேவன் என்பதால் எனது பெலவீனங்களை அறிந்திருக்கிறீர் அவைகள் அனைத்திலும் உங்கள் கிருபையைப் பெற முன்னோக்கிச் செல்ல உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்." (1 கொரிந்தியர் 1:27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
07 வியாழன்

## பாவிகளுக்கு வழியை தெரிவிக்கிறவரான இரட்சிப்பின் தேவன்!

வேதவாசிப்பு
2 தெசலோனி: 03
1 தீமோத்தேயு 01

**"கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்."** (சங்கீதம் 25:8)

கர்த்தருக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ளவரும், மெய் தெய்வமுமான இயேசுகிறிஸ்துவின் மகத்துவமுள்ள நாமத்தினால் இப்புதிய நாள் உங்களுக்கு சௌபாக்கியமுள்ள நாளாக அமைய வாழ்த்துகின்றேன்.** எம் மீட்பராகிய இயேசுகிறிஸ்து அன்புள்ளவரும், நீதி நிறைந்தவருமானவர் என்று பொருத்தனை-பண்ணியுள்ளார்.

அன்பார்ந்தவர்களே! ஒரு நாள் இயேசுகிறிஸ்து அவர் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில் **அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து இயேசுவோடும் அவர் சீஷரோடுங் கூடப் பந்தியிருந்தார்கள்.** பரிசேயர் அதைக் கண்டு அவருடைய சீஷர்களை நோக்கி உங்கள் போதகர் ஆயக்காரரோடும், பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள். **இயேசு அதைக் கேட்டு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.** பலியையல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள். **'நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.' உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இன்றும் எம் பிரதான வசனம் உரைக்கிறது **'கர்த்தர் நல்லவரும். உத்தமருமாயிருக்கிறார். ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்'** என்பதாக ஆகும்.

தேவ பிள்ளைகளே! மனிதர்கள் உங்கள் வெளித்தோற்றத்தைக் கொண்டு உங்களை குறைவாய் மதிப்பிடலாம். உங்களை தப்பாய் விமர்சிக்கலாம். நீங்கள் அறிந்தோ, அறியாமலோ செய்த தவறான செயலைக் குறித்து கதைத்து உங்களை நிந்தித்து அவமானப்படுத்தலாம். தாங்கள் குற்றமற்ற உத்தமர்கள் என காட்டிக் கொள்ளும்படியாக **உங்கள் தவறுகளை சுட்டிக் காட்டி அவதூறு பேசலாம். ஆயினும் நீங்கள் கவலைப்படாதீர்கள்!** இயேசுகிறிஸ்து பாவிகளை இரட்சிக்கவும் அவர்களின் சுயாதீனமான வழிகளை நீக்கி உன்னதமான வழியைத் தெரிவிக்கவும் இன்றும் அவர் ஜீவனுள்ளவராய் காணப்படுகிறார். **இரட்சணியத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! என்னைப் போன்ற பாவிகளை மீட்கும்படியாக இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினவரே உமக்கு ஸ்தோத்திரம்! இன்றும் என் தேவனே என்னை புறம்பே தள்ளாதபடி உங்கள் வழிகளை எனக்கு கற்றுத் தரும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்." (ரோமர் 2:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
08 வெள்ளி

# சதாகாலங்களுக்கும் ஒரே தேவனான நித்திய பிதா!

வேதவாசிப்பு
1 தீமோத்தேயு
அதி: 02 – 03

"நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்." (1 தீமோத்தேயு 1:17)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இத்தினம் சுபதினமாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ஒரே தேவனும் சதாகாலங்களிலும் ஆளுகை செய்யும் ராஜனுமான இரட்சகர் இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கின்றார். ஆதலால் **இன்றைய நாளிலும் உங்கள் வாழ்வின் சகல காரியங்களையும் நிறைவேற்றி மனமகிழ்ச்சியின் நாளாக ஆசீர்வதிப்பாராக!**

தேவனுடைய பிள்ளைகளே! என் முப்பத்தொரு வருட ஆத்மீக வாழ்விலே நான் பெற்றுக் கொண்ட தெய்வீக அனுபவங்கள் அநேகம். அதிலே விஷேசித்த அனுபவமாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது, **தினந்தோறும் அதிகாலை வேளையில் தேவ சந்நிதியில் ஜெபத்திலே தரித்திருக்கும் போது பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளுடன் கூடிய வழி நடத்துதல் மூலமாக என் ஆத்மீக பயணத்தில் முன்னோக்கி இவ்வளவு தூரம் கடந்து வந்தேன் என்பதையே.** அப்படியாக ஜெபத்தில் தரித்திராது போனால் அன்றைய நாள் முழுவதும் பிரச்சினைகளும், துன்பங்களும், கஷ்டங்களும், உபத்திரவங்களும் ஏற்பட்டு நாள் முழுவதும் வெறுப்புடனும், மனக்கிலேசத்துடனும், யோசனையுடனும் நாளை கடத்த வேண்டியிருக்கும். அல்லது கடந்த காலங்களில் எம் வாழ்வில் ஏற்பட்ட பிழைகள், தவறுகள், பாவங்கள் நினைவிற்கு வந்து உள்ளத்தை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கும். **ஜெபிக்கத் தவறும் போது தேவனுடைய அன்பை விட்டு விலகி போகிறோம். அதனால் ஆவியானவருக்கும், எமக்கும் மத்தியில் உள்ள உறவு குறைந்து விடும். இதனால் சத்துருவானவன் எம் உள்ளத்தை குழப்பி எம் வாழ்வை சீர்குலைக்கும்படியாக செயல் புரிவான்.**

தேவ பிள்ளைகளே! தேவனை அறிந்துக் கொண்ட நாள் முதல் தேவன் எப்படி ஆவியானவர் மூலம் உங்களை வழி நடத்துகிறாரோ அதன்படி நீங்களும் அவரையே தொடர்ந்து செல்லுங்கள். **அவரை தரிசிக்க முடியாவிடினும் தம் ஆவியினால் உங்களைத் தொட்டு ஜீவனுள்ளவராக உங்களோடிருப்பதை உணர்த்துவார். அவரையே சார்ந்திருங்கள். உங்கள் விசுவாசம் பலத்த காரியங்களுக்கு ஏதுவாயிருக்கும். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அப்பா பிதாவே! உங்கள் அன்பை உலகிற்கு வெளிப்படுத்தும்படியாக இப்பூமியில் தேவ குமாரனாக அவதரித்தவரே உமக்கு நன்றி! இன்றும் பரிசுத்த ஆவியானவருக்கூடாக என்னை வழி நடத்தி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."
(1 தீமோத்தேயு 2:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
09 சனி

**உங்கள் சகல வேண்டுதல்களையும் நிறைவேற்றும் தேவன்!**

வேதவாசிப்பு
1 தீமோத்தேயு
அதி: 04 – 05

"...உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக."
(சங்கீதம் 20:5)

அன்பான தேவ பிள்ளைகளே! அனுதினமும் எம்மை அசீர்வதிக்கும் **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் சுக பெலத்துடன் கூடிய நந்நாளாக அமையும்படி வாழ்த்துகின்றேன்.** உங்களை அழைத்த பரலோகப் பிதா இன்றும் உங்கள் குரலை கேட்கிறார். நீங்கள் அவரிடம் சமர்ப்பிக்கும் எல்லா விண்ணப்பங்களுக்கும் பதிலளித்து நிறைவேற்றுகிறார். ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பு தேவ பிள்ளைகளே! நீங்கள் எவ்வளவு பேறு பெற்றவர்களாய் இருக்கிறீர்கள் என்று சற்று சிந்தியுங்கள். ஏனெனில் பரலோகத்தில் வாசம் பண்ணுகிற தேவ பிதா இப்புவியிலிருந்து அவரை அழைக்கும் சத்தத்தைக் கேட்டு உங்கள் வேண்டுதல்களையெல்லாம் நிறைவேற்றுகிறார் என **சங்கீதம் 20:5**இல் தாவீது ராஜா கூறியுள்ளார். **"கர்த்தரால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை. அவர் சகலவற்றையும் செய்ய வல்ல தேவ பிதாவாயிருக்கிறார்."** உங்களைக் குறித்து மனிதர்கள் என்ன தீர்மானம் செய்தாலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் இருதயத்தை நோக்கிப் பார்த்து உங்களை ஆசீர்வதிக்கிறார். **எண்ணாகமம் 36ம் அதிகாரத்தில் "இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரமான யோசேப்பின் கோத்திரத்தாருக்கும், செலோப்பியாத்தின் சுதந்தரத்தை அவன் குமாரத்திகள் ஐந்து பேருக்கும் கொடுக்கும்படியாக மோசேக்கு கர்த்தர் கட்டளை கொடுத்தார்"** என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவ பிள்ளைகளே! செலோப்பியாவிற்கு ஆண்பிள்ளைகள் இல்லாதபடியால் அவர்கள் **உரிமையை புத்திரிகள் ஐந்து பேருக்கும் பகிர்ந்தளிக்கும்படியாக மோசேக்கு தேவன் கட்டளையிட்டார்.** செலோப்பியர்கள் சொத்து உரிமைகள் அந்த கோத்திரத்தை விட்டு போகாதிருக்கும்படி அன்று தேவன் கிரியை செய்தாரெனில் இன்று உங்கள் சத்தத்தை கேட்டு உங்கள் ஜெபங்களை நிறைவேற்றாதிருப்பாரோ? உங்கள் மீது அவர் தம் நீதியை விளங்கச் செய்வார். மனிதனையும் அவனுடைய செயல்களையும் பார்க்காமல் தேவனையே நோக்கிப் பாருங்கள். **அவர் இன்றைய தினத்திலும் உங்கள் நிமித்தம் தமது நீதியை நிலைநாட்டுவார். இன்றும் வெற்றிச் சிறந்த நாள்!**


ஜெபம்

என் பிதாவே! என் சத்தத்திற்கு செவி கொடுத்து என் விண்ணப்பங்களை நிறைவேற்றுகிற தேவனே! இன்றைய நாளிலும் உம்மை நன்றியுள்ளத்தோடு ஸ்தோத்தரிக்கின்றேன்! என் சகல வெண்டுதல்களையும் நிறைவேற்றும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

இன்றைய வாக்குத்தத்தம்

"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (பரி.யோவான் 14:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
10 ஞாயிறு

# நீங்கள் போகும் இடமெல்லாம் உங்களோடிருக்கும் தேவன்!

வேதவாசிப்பு
1 தீமோத்தேயு 06
2 தீமோத்தேயு 01

"...நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக." (யோசுவா 1:7)

**ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புக் கொண்ட தேவ பிள்ளைகளே! இன்றும் உங்களுக்கு சுபமே.** இப்புவியில் சகல ஜாதிகளின் மத்தியில் எம்மை தமது சொந்த பிள்ளைகளாக தெரிந்துக் கொண்டது மட்டுமல்ல எம்மை அளவில்லாமல் நேசிக்கிறவரும் எம்மைக் கொண்டு உயர்ந்த திட்டங்களை கொண்டவரும் இப்பூமியில் **உங்களை தாழ்த்துவதற்கு அல்ல உயர்த்த வல்லவருமான அன்பு இரட்சகரான இயேசுகிறிஸ்து இன்றும் எம்மோடிருக்கிறார்.**

அன்பான தேவ பிள்ளைகளே! தேவனுடைய சிருஷ்டிப்பான மிருகங்கள் தமது குட்டிகளை மிகவும் நேசிக்கின்றன. எதிரிகளுடைய தாக்குதலிருந்து தம் குட்டிகளை பாதுகாத்துக் கொள்ளும்படி அநேக வழிகளை கைக்கொள்ளுகின்றன. உதாரணமாக வீட்டின் செல்லப் பிராணியாகிய பூனை **குட்டிகளை ஈன்ற நேரத்திலே தன்னை வளர்த்த அந்த வீட்டார் மூலமாக தன் குட்டிகளுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடுமோ, என்றெண்ணி குட்டிகளை மறைவிடங்களில் ஒளித்து வைத்துக் கொள்கிறது.** தன் குட்டிகளைக் குறித்து வீட்டார் அறிந்து விட்டார்கள் என்று கண்டவுடன் தன் வாயினால் குட்டிகளைக் கௌவிக் கொண்டு வேறு பாதுகாப்பான இடத்திற்கு தம் குட்டிகளை கடத்திவிடும். மிருகங்களிலே பெரியதும், வலிமையானதுமான யானைகள் கூட தம் குட்டிகளை பாதுகாத்துக் கொள்ளும்படியாக அநேக வழிகளில் செயல் புரிகிறது. தொலைக் காட்சி பெட்டியின் **'டிஸ்கவரி'** எனப்படும் நிகழ்ச்சியில் இதைப் பார்த்து அறியலாம்.

தேவ பிள்ளைகளே! இதற்கூடாக ஒரு நாள் மிக அபூர்வமான ஒரு காட்சியை கண்டேன். ஒரு சுட்டித்தனம் நிறைந்த குட்டியோடு ஒரு யானைப் பெற்றோர் யானைக் கூட்டத்தோடு பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். **குட்டி யானை தன் பெற்றோரை விட்டு முன்னோக்கிச் செல்லத் தொடங்கியது. உடனே ஆண் யானை தன் தும்பிக்கையை நீட்டி தன் பக்கத்தில் இழுத்து இருவருக்கும் இடையில் வைத்துக் கொண்டது. பெற்றோரின் பாதுகாப்பில் குட்டியானை பாதுகாக்கப்பட்டது.** எப்படியான அன்பின் பிணைப்பு எனப்பாருங்கள். இன்றைய வேத வசனம் **யோசுவா 1:7**இல் கூறுகிறதுநாம் **'போகுமிடமெல்லாம் நம்மோடிருந்து புத்திமானாய் நடந்து நற்செய்திகளை பெறும்படியாக அவரை விட்டு விலகாதிருக்கும்படி அவர் வசனங்களின்படி ஜீவிக்கும்படியாக'** கூறுகிறது. **நீங்கள் போகுமிடமெல்லாம் தேவன் உங்களோடிருக்கின்றார். ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

பரலோக தேவனே! என் வாழ்விலே நன்மைகள் நடைபெற உங்கள் வார்த்தையின்படி வலதுபுறம், இடதுபுறம் விலகாதிருக்கும்படி வாழ வேண்டுமென அறிவுறுத்தியபடியால் நன்றி! அப்படியே நானும் உம்முடைய வார்த்தையில் நிலைத்து வாழ கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்."
(ஏசாயா 41:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

11 திங்கள்

கர்த்தரிடத்தில் திரும்பும் போது அவர் உங்கள் மீது மனதுருகுவார்!

வேதவாசிப்பு

2 தீமோத்தேயு அதி: 02 – 03

**"துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்;..."** (ஏசாயா 55:7)

பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு ஆசீர்வாதமான நாளே! 'ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ, அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்று எமக்கு வாக்களித்த கர்த்தர் இன்றும் மாறாதவராகவே இருக்கிறார்.'** ஆகையால் அவரால் அவருக்கென்று இவ்வுலகத்தோர் மத்தியிலிருந்து வேறுபிரிக்கப்பட்ட தேவ பிள்ளைகளாகிய **நாங்கள் பாக்கியவான்கள்!**

தேவ பிள்ளைகளே! அவர் நீதிமானகளைக் குறித்து மாத்திரமல்ல அநீதிமான்களைக் குறித்தும் மிக அக்கறையுள்ளவராக இருக்கிறார். ஏனெனில் **ஏசாயா 55:7**இல் கூறுகிறார். **'துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன் அவர் அவன் மேல மனதுருகுவார்'...** என்பதாக. **இயேசுகிறிஸ்துவை விசுவாசித்ததின் மூலம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீதிமான்களாய் விளங்குகிறோம்.** ஆயினும் சில சந்தர்ப்பங்களில் நாம் தேவனின் கற்பனைகளை விட்டு விலகி அவர் வார்த்தைகளுக்கு கீழ்படியாது செயல் புரிகிறோம். இது **ஒரு துஷ்ட செயல் அல்லவா?** இதனால் உலகிலே பாவிகளாய் வாழ்ந்த எம்மை தமது சொந்த குமாரன் மூலம் அவரது சரீரத்தின் மாசற்ற தூய இரத்தத்தால் கழுவி பரிசுத்தப்படுத்தி பரிசுத்தவான்களாய் அதாவது **நீதிமான்களாய் மாற்றிய தேவன் முன் நாம் மறுபடியும் அநீதிமான்களாய் இருக்கிறோமல்லவா?**

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! நீங்கள் அறிந்தோ, அறியாமலோ செய்த அதர்மமான கிரியைகளின் நிமித்தமாகவோ, **அதர்மமான சிந்தனைகள், யோசனைகளினாலோ அவைகளை விட்டு விட்டு மனஸ்தாபத்தோடு அவரிடத்தில் திரும்புங்கள்.** அவர் உங்களைக் குறித்து கரிசனையுடையவராய் இருப்பதால், மனதுருக்கத்தோடு மறுபடியும் உங்களை ஏற்றுக் கொள்வார். **ஜெயத்தின் நாள்!**



ஜெபம்

என்னை சிருஷ்டித்த பரலோகப் பிதாவே! எம்மை உருவாக்கி யாவருக்கும் கரிசனையுள்ள தேவனாயிருப்பதால் என்னை அநீதியான காரியங்களை மன்னித்து என் மீது மனமிரங்கும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதிமொழிகள் 28:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

12 செவ்வாய்

## பரத்திலிருந்து நன்மையான ஈவுகளை எமக்கருளும் தேவன்!

வேதவாசிப்பு

2 தீமோத்தேயு 04
தீத்து 01

**"ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"**

(பரி.மத்தேயு 7:11)

தேவனுக்குள் பிரியமானவர்களே! ***மரித்து ஜீவனுடன் எழுந்த இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் நல்ல நாளாக அமைய வாழ்த்துகின்றேன்.*** இயேசுகிறிஸ்துவை ஆராதனை செய்கிற நாமனைவரும் பரலோகத்தின் உரிமையாளர்களாய் இருக்கிறோம். **பரி.யோவான் 1:12**இல் சொல்கிறது ***'அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்'*** என்பதாக.

தேவ பிள்ளைகள் தலைமுறை தலைமுறையாக வரும் சொத்துரிமைகள் தொடர்வது அப்பரம்பரையை சார்ந்த பிள்ளைகளுக்கு மாத்திரம் தானே? ***அதே போலவே பரலோகத்தின் ஆசீர்வாதங்களும் எமக்கு சொந்தமானது என்பது உண்மையல்லவா?*** மாம்ச பிரகாரமான ***மனிதர்கள் தம் சொந்த பிள்ளைகளை குறித்தே மிக அக்கறைச் செலுத்துவார்கள்.*** மற்ற பிள்ளைகளை இரண்டாவது பட்சமே. ஆனால் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாய் அவரது தூய இரத்தத்தால் கழுவி பரிசுத்தமாக்கப்பட்ட எம்மை பரலோக பிதாவானவர் தம் சொந்த பிள்ளைகளாய் இப்பூமியில் வேறு பிரித்து வைத்துள்ளார்.

அன்பான தேவ பிள்ளைகளே! ***'இயேசுகிறிஸ்து மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான் இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'*** என்று உறுதியளித்துள்ளார். இதன் பிரகாரமாக மிகப் பெரிய ஆசீர்வாதத்தின் உரிமையை இயேசுகிறிஸ்து எமக்களித்துள்ளார். பரலோக பிதாவுடன் கூடிய அன்பின் உறவை எவ்வளவாய் பெலப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்பதை உணருகிறீர்களா? ***தமது ஆவியை எமக்களித்து எம்மை சொந்தமாக்கி தமது பிள்ளைகளுக்குரிய ஆசீர்வாதங்களை பரம பிதாவானவர் எமக்கருளுகிறார். மனமகிழ்ச்சியின் நாள்!***

ஜெபம்

என் பரலோகப் பிதாவே! மாம்ச பிரகாரமான என் தகப்பனை விட என்னில் அன்பு கூறுகிறவரே உங்கள் தயவுக்காக ஸ்தோத்திரம்! எனக்கு எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாக செய்கிறவரே இன்றும் உங்கள் நன்மையான ஈவுகளை எமக்கருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை."
(யாக்கோபு 1:17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
13 புதன்

வல்லமையால் நிரப்பி
எம்மை பெலப்படுத்தும்
பரிசுத்தாவியானவர்!

வேதவாசிப்பு
தீத்து
அதி: 02 - 03

**"அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன். ஒரே மனுஷனை முறியஅடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்."**
(நியாயாதிபதிகள் 6:16)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ளவரும் வல்லமை பொருந்தியவருமான **இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தில் இன்றும் உங்களுக்கு வெற்றியுடன் கூடிய நந்நாளே! இரட்சகர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களாகிய நாம் பரலோக தேவனின் சொந்த பிள்ளைகளாகும் வரப்பிரசாதத்தை பெற்றவர்களாயிருக்கிறோம்.** அவரைப் பற்றிக் கொண்ட நாள் முதல் அவரது பரிசுத்த ஆவியானவர் எம்மில் வாசம் பண்ணுகிறார்.

தேவ பிள்ளைகளே! பரலோக தேவனின் தூய ஆவியானவர் எம்மில் வாசம் பண்ணுவராகில் **நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறோம் என சற்று சிந்தியுங்கள். நியாயாதிபதிகள் 6ம் அதிகாரத்தில் 'இஸ்ரவேலர்கள் பொல்லாப்பான காரியங்கள் செய்ததின் நிமித்தம் ஏழு வருஷம் மீதியானயரின் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தார்கள்.'** அவர்கள் சிறுமைப்பட்டதால் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். அவர்கள் சத்தத்தைக் கேட்ட **கர்த்தர் யோவாசின் குமாரனாகிய கிதியோனை இவர்களை நீக்கலாக்கி இரட்சிக்கும்படியாக தெரிந்துக் கொண்டார்.** அப்போது கிதியோன் தேவனை நோக்கி ஆ என் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன் **இதோ மனோசியின் என் குடும்பம் மிகவும் எளியது, என் தகப்பன் வீட்டில் நான் எல்லோரிலும் சிறியவன் என்றான்.**

தேவ பிள்ளைகளே! **'கிதியோனை நோக்கி நான் உன்னோடே கூட இருப்பேன். ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய்'** என்றார். உங்களையும் அவரது ஊழியத்தின் நிமித்தம் ஏதோ ஒரு காரியத்திற்காக தெரிந்துக் கொண்டிருந்தால் அதை நீங்கள் நிறைவேற்றுவது அவர் மூலமாகவேயாகும். அதாவது **அவரால் எமக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரே அதை நிறைவேற்றுகிறார். உங்களைக் குறித்த பெரிய திட்டத்தோடே உங்களை அழைக்கிறார்.** ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்களை நித்திய வாழ்விற்கென்று அழைத்தவர் இன்றும் விசுவாசத்துக்குரியவராகவே விளங்குகிறார். உங்கள் எதிரிகளைக் கண்டு பயப்படாதீர்கள்! **ஆவியானவருக்கூடாக வல்லமையைப் பெற்று சத்துருவை ஜெயம் கொள்ளுங்கள். வெற்றியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் தேவ ஆவியானவர் மூலம் எம்மை வல்லமைப்படுத்துகிறபடியால் நன்றி செலுத்துகிறேன். இன்றும் என் பகைவர்களிடமிருந்து ஜெயம் பெற அருள் தருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"...என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 4:6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
14 வியாழன்

# உங்களுக்கு ஆலோசனை அருளும் ஆலோசனைக் கர்த்தர்!

வேதவாசிப்பு
பிலேமோன் 01
எபிரேயர் 01

**"எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்."**
(சங்கீதம் 16:7)

அன்பார்ந்தவர்களே! நித்தியமானவரும், சம்பூரணவருமான **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்கள் வாழ்வின் சந்தோஷமும், சமாதானமும் நிலவுவதாக என வாழ்த்துகின்றேன்.** எம் கர்த்தர் எமக்கு ஆலோசனைகளைத் தருகிறவர். இப்பூமியில் மத்தியிலிருந்தும், சகல ஜாதிகளிலிருந்தும் பரிசுத்த ஜனமாக அவருக்கென்று எம்மை வேறுபிரித்துக் கொண்டபடியால் எம்மை அவர் பாதுகாத்துக் கொள்ளும்படியாக **எந்நேரமும் எச்சரிப்புடன் கூடிய ஆலோசனைகளைத் தந்து வெளிப்பாடுகளோடு வழி நடத்துகிறார்.** தாவீது ராஜா **சங்கீதம் 16:7**இல் உரைக்கிறார் **'எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன். இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்'** என்பதாக.

தேவ பிள்ளைகளே! பெற்றோரும் எமக்கு புத்திமதி சொல்கிறார்கள் அல்லவா? எம் ஆண்டவர் எம் கண்களுக்கு புலப்படாதவராய் இருக்கிறார். ஆயினும் அவரது சத்திய வசனத்திற்கூடாக எம்மோடு பேசுகிறார். **எம் கரங்களுக்கு அருளப்பட்ட வேதாகமத்தின் மூலமாக அவர் ஆலோசனை அளிக்கிறார். என் ஆத்மீக வாழ்வில் முப்பத்தொரு வருடங்களில் இத்தகைய பெரிய ஆசீர்வாதத்தை காண்பது அவரது ஆலோசனை-களினாலேயாகும். இவ் ஜீவ மன்னா தினமஞ்சரி** உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அநேகருடைய ஆத்மீக வாழ்வை வளம் பெறச் செய்வதும், வாழ்க்கை மாறுதல் அடைந்திருப்பதும், இப் புத்தகம் பாராட்டைப் பெறுவதும் அவரது **ஜீவ வார்த்தைகளில் காணப்படும் புத்திமதிகளும், ஆலோசனைகளினாலும் அல்லவா? பதினைந்து வருடங்களில் இத்தகையதொரு பெரிய அறுவடை ஏற்பட்டிருப்பது அவர் எனக்களித்த ஆலோசனைகளை நான் பின்பற்றுவதனாலேயாகும்.**

தேவனுடைய பிள்ளைகளே! ஆலோசகர்ளோ, பொறுப்பாளர்களோ, மேற்பார்வையாளரோ எவருமே இல்லாமல் என் சபையின் காரியங்கள் யாவும் மிகச் சீராய் நடப்பது தாவீதின் தேவனானவர் எம்மோடிருப்பதி-னாலேயாகும். **தேவனிடமிருந்து நாம் பெறும் ஆலோசனை, புத்தி, ஞானம் அதிகமாகும். நீங்கள் அவரின் ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் கேட்டு நடந்து ஜெயத்தை பெற்றுக் கொள்ளுங்கள். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

மகா பரிசுத்த ஆவியானவரே! உம்முடைய பரிசுத்த ஆவியினால் எம்மை வழி நடத்துகிறபடியால் நன்றி! என் ஆத்துமாவை பரிசுத்த ஆவியினால் நிரப்பி உம்முடைய ஆலோசனைகளினால் என்னை வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக் காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்." (நீதிமொழிகள் 4:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
15 வெள்ளி

# இஸ்ரவேலின் தேவனே எம் இரட்சகர்!

வேதவாசிப்பு
எபிரேயர்
அதி: 02 - 03

"நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்ததுமுதல் உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிறேன்; ஆகையால் நீ என்னையன்றி வேறே தேவனை அறியவேண்டாம்; என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை." (ஓசியா 13:4)

உன்னதமான தேவனுடைய பிள்ளைகளே! **அவரது ஒப்பற்ற உயர்ந்த நாமத்தினால் உங்களை வாழ்த்துகின்றேன். இன்றும் தேவ அனுக்கிரகத்தோடு கூடிய நல்ல நாளே!** வாசம் பண்ணுகிறவராயிருந்த போதும் அவரது படைப்பான எம்மை மிக அக்கறையுடன் விசாரிக்கிறவராய் இருக்கிறார். ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! ஆபிரகாமின் தேவனானவர் ஆபிரகாமின் புத்திரன் ஈசாக் மூலமாக **இஸ்ரவேல் வம்சத்தை இப் புவியில் பெருகும்படி செய்தார். ஆயினும் கானான் தேசத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் நிமித்தம் சுமார் எழுபது பேர் கானானை விட்டு எகிப்திற்கு சென்றார்கள். இவர்கள் எகிப்திலே ஏராளமாய்ப் பெருகி பலத்திருந்தார்கள்.** தேசம் அவர்களால் நிறைந்திருந்தது எகிப்திலே தோன்றிய புதிய ராஜா தன் ஜனங்களை நோக்கி இதோ **இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள்.** அவர் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால் அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி நமக்கு விரோதமாக யுத்தம் பண்ணி தேசத்தை விட்டுப் போகாதபடிக்கும் நாம் அவர்களைக் குறித்து ஒரு உபாயம் பண்ண வேண்டும் என்றான்.

தேவ பிள்ளைகளே! சுமை சுமக்கிற வேலையினால் அவர்களை ஒடுக்கும்படிக்கு **அவர்கள் மேல் விசாரணைக்காரர்களை வைத்தார்கள். கொடுமையாய் வேலை வாங்கினார்கள். அவர்கள் ஜீவனும் இதனால் கசப்பானது, உங்கள் வாழ்க்கையும் கசப்பானதாய் இருக்கிறதா?** மோசேயை அழைத்து இஸ்ரவேலரின் தலைவனாக்கி இஸ்ரவேலரின் அடிமைத்தனத்தை விடுவித்த தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியாமற் போன போது ஆண்டவர் சொல்கிறார் என்னையன்றி வேறு இரட்சகர் இல்லையென்றே. **எம்மை தம் சொந்தமாக தெரிந்துக் கொண்டவர், இஸ்ரவேலின் தேவனானவர் இன்றும் எம் இரட்சகராய் இருக்கிறார். இரட்சிப்பின் நாள்!**

ஜெபம்

என் இஸ்ரவேலின் இரட்சகரே! என்னையும் உங்களுக்கென்று தெரிந்துக் கொண்டபடியால், என்னை விடுவிக்கிறவரும் நீங்களே ஆகையால் உங்களுக்கு நன்றி! எல்லா அடிமைத்தனத்திலிருந்தும் என்னை நீங்கலாக்கி இரட்சிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை." (ஏசாயா 43:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
16 சனி

அழிவுக்கு நீங்கலாக்கி உங்களை விடுவிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
எபிரேயர்
அதி: 04 – 05

**"உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை; நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப்பொருளைப்போல இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."** (எரேமியா 39:18)

கர்த்தருக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் உதயமான இத்தினமும் உங்களனைவருக்கும் சுபதினமாக அமைய வாழ்த்துகின்றேன்.** உங்கள் வாழ்வினை விடுவித்து மகிழ்ச்சிகரமாக மாற்ற வல்ல தேவன் உங்களோடிருக்கிறார். **உங்கள் வாழ்க்கையை அழிக்க மாட்டேன் என்று உறுதியளிக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! எனக்கு இருபத்தேழு வயதான போது ஒரு பயங்கரமான வயிற்றுவலியின் காரணமாக மிக வேதனைப்பட்டேன். இது **'கேஸ்டிரிக்'** எனும் நோயாகும். இத்தோடு **மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்ற கெட்ட பழக்கங்களுக்கும், பாவத்திற்கும் அடிமைப்பட்டிருந்தேன்.** இப்படிப்படியான பாவங்கள் காரணமாக என் வாழ்வு இருளடைந்திருந்தது. **1984ம் ஆண்டு** என் நோயிலிருந்து விடுதலையைப் பெறும்படியாக இயேசுகிறிஸ்துவைத் தேடி ஆத்மீக தேவ சபைக்குச் செல்லும்படியாக நேர்ந்தது. **அங்கே என் ஆத்மீக தகப்பனுடைய ஜெபத்தினால் பதினொருவருடக்காலமாயிந்த கேஸ்டிரிக் வியாதிலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொண்டேன்.**

தேவ பிள்ளைகளே! அதன் பிறகு கொஞ்சம், கொஞ்சமாக என் சகல பாவக்கட்டுகளிலிருந்தும் விடுதலைப் பெற்றேன். **தேவன் என்னை அபிஷேகித்த நாள் முதல் கடந்த முப்பத்தொரு ஆண்டுகாலமாக நான் என் தேவனோடு நடந்துக் கொண்டிருக்கிறேன். 'நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல் இருக்குமென்று'...... எரேமியா 39:21**இல் பிரகாரமாக என் பரலோகப் பிதா எனக்கு பெற்றுத் தந்த மகா கிருபையினால் நான் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தேன். அதனால் என் ஜீவனை அழிக்காதபடி காத்து மறுவாழ்வு அருளினார். **நீங்களும் உங்கள் அழைப்பிற்கு கீழ்படிந்து அவரை விசுவாசித்து நடந்தால் ஒரு நாளும் அழிவு உங்களை நெருங்காது. ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அன்பின் பரலோகப் பிதாவே! உங்கள் ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபடியால் என் வாழ்வினை விடுவித்துக் காத்துக் கொண்டீரே உமக்கு நன்றி! வாழ்நாளெல்லாம் உம்மை மாத்திரம் விசுவாசித்து வாழ கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." (பரி.யோவான் 10:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
17 ஞாயிறு

# கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்!

வேதவாசிப்பு
எபிரேயர்
அதி: 06 – 07

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." (சங்கீதம் 103:13)

சர்வவல்லரின் நாமத்தை ஆராதிக்கும் தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நந்நாளே!** எம் பரலோகப் பிதாவானவருடைய அன்பு அளவற்ற ஆழமான அன்பாயிருக்கிறது. எம் மாம்சப் பிரகாரமான தந்தையான **எம்மை பெற்றெடுத்த தகப்பனை பார்க்கிலும் அதிகமாய் எம்மீது அன்பு கொண்டுள்ளார்.** ஆகையால் உங்களை அவர் நேசிக்கிறபடியால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பார்ந்தவர்களே! பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்படிய மறுக்கும் போது **அவர்களை தண்டிக்கும்படியாகவும், எச்சரிக்கும்படியாகவும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. சங்கீதம் 103:13** கூறுகிறது **'தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்'** என்று இதில் சொல்லப்படுகிறது. விஷேசித்த காரியம் என்னவென்றால் தேவ பயம் உள்ளவர்களுக்கு அவர் இரங்குகிறார் என்பதாகும். ஆகவே நீங்களும் **தேவனிடம் பயம் உள்ளவர்களாய் வாழப் பழகிக் கொள்ளுங்கள். என உள்ளத்தில் தேவ பயம் உண்டாகும்படி செய்வது எவ்வாறு என நினைக்கிறீர்களா?**

தேவ பிள்ளைகளே! உங்கள் உள்ளத்திலே தேவ பயம் உண்டாயிருக்கம்படியாக, உங்களை தேவனுக்கு ஒப்புவித்து ஜெபியுங்கள். **எரெமியா 32:38,39ல்** கர்த்தர் கூறுகிறார் **'அவர்கள் என ஜனமாயிருப்பார்கள் நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் தங்களுக்கும் தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுணடாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு'** என்பதாக. ஆகையால் **தேவ பயமுள்ள உள்ளத்தை பெறும்படியாக இடைவிடாமல் ஜெபத்திலே தரித்திருங்கள்.** அப்போது தேவன் தேவ பயமுள்ள இருதயத்தைத் தருவார். இன்னுமாக அவரது மகா இரக்கம் உங்களை நோக்கி அபரிமிதமாக கடந்து வரும். அது தடைபடாதபடி இரக்கமாயிருக்கும உங்களில் காணப்படும் எல்லா **பிரச்சினைகள், கஷ்டங்கள் யாவும் நீங்கி தேவ ஆறுதல் பெற்று முன்னோக்கி நடக்கும்படி அருள் புரிவார். அநுக்கிரகத்தின் நாள்!**

ஜெபம்

என் நல்ல இயேசுவே! உங்கள் மேல் பயமுள்ளவர்களுக்கு நீங்கள் இரக்கம் செய்கிற தேவன் என அறிவேன். ஆகவே என் அன்பு இரட்சகரே உமக்குப் பயந்து உமது மகா கிருபையைப் பெற்று வாழ கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை."
(யோவேல் 2:27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
18 திங்கள்

## உங்களுடனே கூட வருகின்ற தேவன்!

வேதவாசிப்பு
எபிரேயர்
அதி: 08 – 09

**"நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்;..."** (உபாகமம் 31:6)

தேவ பிள்ளைகளே! எம்மை விட்டு விலகாதவரும், ஒரு போதும் கைவிடாதவருமான **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றும் உங்களை வாழ்த்துகின்றேன்.** விண்ணையும், மண்ணையும் உண்டாக்கிய சர்வ வல்லமையுள்ள தேவன் இன்றும் ஜீவிக்கின்றார். **அவரே எம் சிருஷ்டிகரான கர்த்தர் உங்களோடி–ருப்பதால் கலங்காதீர்கள்!**

தேவ பிள்ளகைளே! சர்வ வல்லவரும், சர்வ பராக்கிரமுள்ளவரும். ஜீவிக்கின்றவருமான **கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்–களாயிருக்கிறோம்!** ஏனெனில் இயேசுகிறிஸ்து கூறுகிறார் நாங்கள் தேவனை விசுவாசிப்போமாகில் அவரது மகிமையைக் காண்போம் என்பதாக. **'இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் பொருட்டு மோசேயை தலைவனாக தெரிந்துக் கொண்ட போது மோசேயை நோக்கி நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார்.'** அப்பொழுது மோசே தேவனை நோக்கி பார்வோனிடத்திற்குப் போகவும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம் என்றான். **அதற்கு அவர் நான் உன்னோடே இருப்பேன் நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வந்த பின் நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்.** நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்.

தேவ பிள்ளைகளே! அவரது வார்த்தையின்படி மோசேயுடன் கூட அவர் செயல் புரிந்தார். **எகிப்திலிருந்து இஸ்ரவேலரை வெளியே கொண்டு வரச் செய்தார். யோசுவா ஜனங்களுக்கு உரைத்தது நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். 'அவர்களுக்கு பயப்படவும், திகைக்கவும் வேண்டாம் உன் தேவனாகிய கர்த்தர் தாமே ஆண்டவர் இப்போதும் செயல் புரிகிறார்.'** இந் நாட்களிலேயும் அவர் எங்களோடு கூட வருகிறார். ஆகையால் **பயப்படாதிருங்கள்! கர்த்தர் உங்களோடிருக்கிறார். கிருபையின் நாள்!**

ஜெபம்

என் அன்பின் இயேசுவே! நீங்கள் மோசேயின், யோசுவாவின் தேவனாக இருந்தது போல் என்னோடிருந்து என்னையும் நடத்திச் செல்லுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்." (சங்கீதம் 48:14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
19 செவ்வாய்

## உங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் சுகப்படுத்தும் தேவன்!

வேதவாசிப்பு
எபிரேயர்
அதி: 10 – 11

**"...நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."** (எரேமியா 30:17)

பிரியமான தேவ பிள்ளைகளே! ***ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் நோயற்ற சுக ஜீவியமாக வாழ வாழ்த்துகின்றேன்.*** எங்கள் தேவனாயிருக்கிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எம்மை சுகமாக்க வல்லவராயிருக்கிறார். அவர் இஸ்ரவேலருக்கு வாக்களித்தார்... ***'நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'*** என்று ஆகையால் இன்றும் நீங்கள் சுகதேகியாக வாழும்படி கிரியைச் செய்வார்.

தேவ பிள்ளைகளே! ***உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!*** எம் கர்த்தர் எமக்கு சரீர சுகத்தை மாத்திரமல்ல ஆத்துமாவிற்கு சுகத்தை அளிக்கவும் வல்லவராவார். இன்றைய நாளின் பிரதான வசனத்திற்கூடாக ***'ஆண்டவர் ஆத்துமாவிற்கும் சுகம் தர வல்லவராயிருக்கிறார் என என் ஆத்துமாவிற்கு உணர்த்தினார்.'*** எம் சரீரம் நோய் வாய்ப்பட்டால் அதை குணமாக்க அநேக வைத்திய சிகிச்சைகள் உண்டு. மிகப் பயங்கரமான உயிர்க் கொல்லி நோய்கள் ஏற்படின் வைத்திய சிகிச்சை மூலம் தற்காலிக சுகத்தை பெறலாம். அல்லது அது பரவுவதை தடை செய்யலாம். ***மனிதனுடைய ஆத்துமா நோய்வாய்ப்படுமேயானால் அவர்களது ஆத்தமாவை குணப்படுத்த யாரால் கூடும். எப்படிக் கூடும் என்பது ஒரு கேள்விக் குறியாயிருக்கிறது.***

தேவ பிள்ளைகளே! ***நீதிமொழிகள் 3:12***இல் கூறுகிறது ***'தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்.'*** நாம் அவரது வார்த்தைகளை பொருட்படுத்தாதது அவரது ஆத்துமாவை வேதனைப்படுத்தும்படியாக, கீழ்படியாது நடப்போமாகில் எம் தவறுகளை திருத்தும்படியாக எம்மை தண்டிப்பார். அது எம் சரீரத்தில் உணரச் செய்ய அல்ல ஆத்துமா உணரும்படியாகவே. இதனால் எம் இருதயம் புண்பட்டு வேதனையளிக்கும். அப்போது ***எம் ஆத்துமா வியாகுலமடைந்து எம் தவறுகளை, இப்படியான காரியங்களைக் குறித்து மனஸ்தாபப்படும் போது ஆண்டவர் எம் அருகில் வந்து எம் இருதயத்தின் வேதனைகளை அகற்றி ஆத்துமாவைக் குணப்படுத்துவார்.*** முதலாவதாக எம் ஆத்துமாவை பரிபூரணப்படுவதையே எம் ஆண்டவர் விரும்புகிறார். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் நல்ல இயேசுவே! என்னை சுகப்படுத்தும் தேவனே! உமக்கு நன்றி! இன்றைய தினத்திலும் என் ஆத்மீக சுகத்தையும், சரீர சுகத்தையும் அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்." (சங்கீதம் 147:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜுலை

20 புதன்

# உங்கள் இருதயத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் தேவன்!

வேதவாசிப்பு

எபிரேயர் அதி: 12 - 13

**"அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக."** (சங்கீதம் 20:4)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்து என்னும் ஜீவனுள்ள நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.** இன்றும் உங்களுக்கு சுபமே! எம் வாழ்க்கையை குறித்து சகல பொறுப்புகளையும், பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவன் பொறுப்பேற்றுள்ளார். **பரலோகத்தின் தேவனையே விசுவாசித்து அவரையே மாத்திரம் நோக்கிப் பார்த்திருப்போமாகில் எம் வாழ்க்கைக்குரிய காரியங்கள் யாவும் அவரால் நிறைவேறும்.**

அன்பார்ந்தவர்களே! இன்றைய எம் பிரதான வேதவாக்கியம் **சங்கீதம் 20:4**இல் தாவீது ராஜா கூறுகிறார். **'அவர் உமது மன விருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக'** என்று. இதன்படி இன்றும் தேவன் உங்கள் இருதயத்தை காண்கிறார் என்றும் **அதன் விருப்பத்தின்படி ஆசீர்வதிப்பார் என்றும் விசுவாசியுங்கள்.** நீங்கள் உங்களைக் குறித்து வைத்துள்ள ஆலோசனைகளையும், திட்டங்களையும் விட அதைக் காட்டிலும் அதிக உயர்வானதும், நன்மையானதுமான அநேக திட்டங்களையும், ஆலோசனைகளையும் ஆண்டவர் உங்களைக் குறித்துக் கொண்டுள்ளார். ஆகையால் **கலங்காதிருங்கள்!** உங்கள் மன விருப்பத்தைக் பார்க்கிலும் அதிகமாய் உங்கள் எதிர்கால வாழ்வை அழகாக அமைத்துக் கொடுக்கும்படியாக அவர் பார்த்திருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! விசுவாசத்தோடு பரம பிதாவை நோக்கி ஜெபம் செய்யுங்கள். **உங்கள் வேண்டுதல்களை அவரிடம் சமர்ப்பித்ததன் பின் அதைக் குறித்த மன பாரத்தை அகற்றிவிடுங்கள்.** ஏனெனில் இயேசுகிறிஸ்து கூறுகிறார் **பரி.மாற்கு 11:24**இல் **'நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்'** என்பதாக. ஆகையால் **பரலோகத்தின் தேவன் உங்கள் மன விருப்பத்திற்கும் மேலாய் உங்களை ஆசீர்வதிப்பார்.** நீங்கள் விரும்பும் காரியமாய்க் உங்களுக்கு ஏற்றதாயின் நன்மையைக் கொண்டு வருமாகில் பிதா அதை உங்களுக்கு அளிப்பார். நீங்கள் சரியானதை கேட்கும் பொழுது ஏற்ற வேளையில் அவைகள் உங்களை நோக்கி கடந்து வரும்படியாக செயலாற்றுவார். **ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் பிதாவே! நீங்கள் என் மனவிருப்பத்தின்படி அறிகிற தேவன்! அதே போல் என் மனவிருப்பத்தின் விருப்பங்கள் உமக்குச் சித்தமானதை மாத்திரம் எங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." (சங்கீதம் 37:5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

21 வியாழன்

## பணமின்றி உங்களை விடுவிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
யாக்கோபு
அதி: 01 – 02

**"விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."** (ஏசாயா 52:3)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தினால் இத்தினத்திலே உங்கள் வாழ்வின் எல்லா அடிமைத்தனத்தினின்றும் விடுதலையை பெற்றுக் கொள்ளும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** மேலே தரப்பட்ட வேத வசனம் **'விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்'** என்பதாக. இதன்படியாக கர்த்தர் தாமே எம்மை அடிமைத்தனத்தினின்று விடுவித்தார். அவரே எம் விடுதலையின் தேவனாவார்.

தேவ பிள்ளைகளே! **'நாம் யாருக்கு விற்கப்பட்டோம், நாம் யாருக்கு அடிமைகளாய் இருந்தோம் என நீங்கள் சிந்திக்கிறீர்களா?'** ஆதி நாட்களில் மனிதர்களை பணம் கொடுத்து வாங்கி தமக்கு அடிமைகளாக்கி அவர்களைக் கொண்டு வேலை வாங்குவது வழக்கமாயிருந்தது. **ஒரு மனிதன் இன்னுமொரு மனிதனை விலை கொடுத்து வாங்கி அவனைத் தனது அதிகாரத்திற்குட்படுத்தி அடிமையாக வைத்துக் கொள்வான். அடிமைப்பட்டதன் எஜமானுடைய சகல கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டியவர்களாய் கட்டப்பட்டவனாய் இருப்பான்.** இன்றைய பிரதான வசனத்தின்படி இஸ்ரவேலுக்கு கர்த்தர் கூறுவது விலையின்றி விற்கப்பட்டவர்களை எந்தவிதமான பணக்கிரயமுமின்றி மீட்கப்படுவார்கள் என்று. இதன்படி தற்போது பணத்திற்கு மனிதர்கள் அடிமைகளாவது என்பதல்ல. அநேக காரியங்களில் மனிதர்கள் அடிமைப்பட்டு கிடக்கிறார்கள். விஷேசமாக **சாத்தான் உலக மனிதர்களை அநேக பாவக் கிரியைகளுக்கு அடிமைப்படுத்தியுள்ளான்.**

தேவ பிள்ளைகளே! **போதை வஸ்துகள், மது போன்ற குடிவகைகள், புகைபிடித்தல், வெற்றிலை போடுதல் மாம்சத்தின் கிரியைகள், நீதி விரோதமான வியாபாரங்கள் இப்படியான அநேக பாவ காரியங்களுக்கு மனிதர்கள் அடிமையாக இருக்கிறார்கள்.** இவைகளிலிருந்து விடுபட நினைத்தாலும் விடுதலை பெற முடியாதபடி இருக்கிறார்கள். இதனால் வாழ்விலே அநேக பிரச்சினைகள் ஏற்பட்டு மடிந்து போகிறதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவை நம்பி அவரிடம் வருகின்றவர்களை **தேவன் இலவசமாக விடுவிக்கிறார். சகல பாவ கட்டுகளை நீக்கி நிரந்தரமான விடுதலையை அளிக்கிறார். நீங்களும் வந்து மீட்பை விடுதலையைப் பெற்றுக் கொள்ளுங்கள். இரட்சணியத்தின் நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! நீங்கள் என்னை சாத்தானுடைய அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டபடியால் நன்றி! இன்றும் அவனுடைய எல்லா சூழ்ச்சிகளுக்கும் தப்புவித்து விடுதலையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1 கொரிந்தியர் 6:20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
22 வெள்ளி

வலது,
இடது புறத்திலும்
நீங்கள்
இடங் கொண்டு
பெருகுவீர்கள்!

வேதவாசிப்பு
யாக்கோபு
அதி: 03 - 04

**"நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்."** (ஏசாயா 54:3)

அன்பான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் மகிமையுள்ள நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நன்மையுடன் கூடிய நல்நாளாக அமைய பிரார்த்திக்கின்றேன்.** ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தர் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறவராயினும் தம்மால் உலகிலிருந்து வேறு பிரித்துக் கொள்ளப்பட்ட **அவருடைய சுதந்திரர்களாகிய நாம் ஒவ்வொருவரைக் குறித்தும் மிகவும் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். அவர் எமது வாழ்வினை ஆசீர்வதித்து இப்புவியில் பெருகப் பண்ணுகிறார்.**

அன்பான தேவ பிள்ளைகளே! **ஏசாயா 5:3**இல் குறிப்பிடப்பட்டுள்ளது **'நீ வலது புறத்திலும், இடது புறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய், உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக் கொண்டு பாழாய் கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்'** என்பதாக. இதிலிருந்து தேவன் எம்மீது கொண்டுள்ள அக்கறை எவ்வளவாய் இருக்கிறதென்பதை அறியலாம். ஏனெனில் எம் சந்ததிகளின் பெருக்கத்தை கூட அவர் நினைத்துப் பார்க்கிறவர் **இப்பூமியில் சகல ஜாதிகளின் மத்தியிலிருந்து எம்மை தமது சொத்தாக பிரித்தெடுத்தார்.** எம் மூலமாய் அவரது வம்சம் இப்பூமியில் பெருக வேண்டுமென்பதை அவருடைய விருப்பமாயிருக்கிறது. **தனி மனிதனான ஆபிரகாமை ஆசீர்வதித்தவர் வானத்து நட்சத்திரங்களை போலவும், கடற்கரை மணலைப் போலவும் அவனது சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்றதற்கிணங்க எண்ணிலடங்கா இஸ்ரவேலரை இப்பூமியில் பெருகச் செய்தவர் நம் ஆண்டவரே! இன்றும் அவர் மாறாத தேவனாயிருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! நம் கர்த்தராகிய **இயேசுகிறிஸ்து வனாந்தரமான ஓர் இடத்திலே தன்னிடத்திலே வந்த திரளான ஜனங்களுக்கு போஜனம் கொடுக்கும்படியாய் ஐந்து அப்பத்தை இரண்டு மீன்களை ஆசீர்வதித்து கொடுத்தார்.** ஸ்திரீகளும், பிள்ளைகளும் தவிர புருஷர்கள் ஐயாயிரம் பேராயிருந்தார்கள். அவரது ஜனங்கள் பெருகும்படியாகவும், அவர்கள் மூலமாய் அவரது நாமத்தை மகிமைப்படுத்தும்படியாக செயல் புரிகிறார். ஆகையால் **நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததிகளாய் விளங்குவீர்கள். ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் நல்ல மேய்ப்பரே! என் மூலமாக உங்கள் வம்சம் பெருகும்படியாக இப்பூமியல் என்னை ஆசீர்வதிக்கிறபடியால் நன்றி! இன்னுமாய் உங்கள் சித்தம் எம் வாழ்க்யைில் நிறைவேற எம்மை ஆசீர்வதிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"...;அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப்போவதில்லை; அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை." (எரேமியா 30:19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

23 சனி

**இயேசு எனும் நாமமே எல்லாவற்றிற்கும் மேலான நாமம்!**

வேதாசிப்பு

யாக்கோபு 05
1 பேதுரு 01

**"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,.....,
எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."**
(பிலிப்பியர் 2:9,11)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் தேவ பயம் உங்களை பரிசுத்தமாக வாழ வைக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** நீங்கள் இவ்வுலகில் வல்லமையான நாமங்களைக் கேள்விப்பட்டிருக்கக் கூடும். உலகில் பிரபல்யமான பெயர்களைக் கேட்டிருக்கலாம் ஆனாலும் அந்த நாமங்களை விட மேலான உயர்ந்த நாமத்தைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? **அது வானத்திலும், பூமியிலும் வல்லமையான நாமமான இயேசு எனும் நாமம் அல்லவா?**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பிலிப்பியர் 2:9**இல் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி எனக் கூறப்பட்டுள்ளது. **பிலிப்பியர் 2:10**இல் **'இயேசுவின் நாமத்தில் வானோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,'** என உரைக்கப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளே! நான் உங்களுக்குக் கூறுவது இயேசு எனும் நாமத்திற்கு நிகரான நாமம் இப்பூமியில் எங்கும் இல்லையென்றாகும். தேவனின் நாமத்தின் வல்லமை ஒரு போதும் மாறாது **கிறிஸ்து என்பது அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது பொருளாகும். எங்கள் பாவத்தின் காரணமாக தன்னுயிரை அர்ப்பணித்து எங்களை பாவத்திலிருந்து புது வாழ்வை பெற்றுத் தந்தது அவரே! மரணத்தினின்று மூன்று நாட்களில் மரணத்தை வென்று எழுந்ததும் அவரேயாகும்.**

தேவ பிள்ளைகளே! எங்களைச் சிருஷ்டித்த தேவ பிதாவானவர் எங்கள் மீது அளவற்ற விதமாக அன்பு கொண்டுள்ளமையால் **எங்கள் வாழ்வில் சகல வழிகளிலும் வெற்றி பெறச் செய்ய இயேசு எனும் உயர்ந்த நாமத்தை தனது குமாரனுக்குச் சூட்டினார்.** அந்நாமத்தை மிகவும் பக்தியோடும், கௌரவத்தோடும் நாவில் உச்சரிக்கும் எல்லா வேளையிலும் மகா வல்லமை வெளிப்படும். நீங்கள் முகங் கொடுக்கும் எல்லாப் பிரச்சினைகள், துன்பங்கள் ஆகியவற்றின் போது அந்நாமத்தை உச்சரியுங்கள். **உலகை வென்ற இயேசுவின் நாமத்தால் விடுதலை பெறுவீர்கள். விடுதலையின் நாள்!**

ஜெபம்

அன்பின் பரலோகப் பிதாவே! இயேசு எனும் வல்லமையான நாமத்திற்கு பங்காளியாகி விடுதலை பெற என்னையும் உங்கள் மகனாக மாற்றியதால் ஸ்தோத்திரம்! அந்த நாமத்தின் மூலம் எல்லாவற்றிலும் ஜெயத்தைப் பெற்றுத் தாருங்கள் இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." (அப்போஸ்தலர் 4:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
24 ஞாயிறு

# உங்கள் சத்துருக்களை நேசியுங்கள்!

வேதவாசிப்பு
1 பேதுரு
அதி: 02 - 03

**"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்."**
(பரி.யோவான் 13:34)

பிரியமுள்ளவர்களே! **ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவுக்கூடாக நன்மைகளால் நிரம்பிய நல்ல நாளைப் பெற்றுக் கொண்டீர்கள் என உங்களை வாழ்த்துகின்றேன். 'தேவன் அன்பாகவே இருக்கின்றார்'** என **1யோவான் 4:8**இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் இன்றும் அவரின் அன்பு குறைவின்றி உங்களுக்கு கிடைப்பதாக. **தேவன் உங்கள் பேரில் வைத்த அன்பு ஒரு நாளும் மாறாது அது நித்தியமானது.**

தேவ பிள்ளைகளே! விஷேடமாக தேவ வசனத்தில் கூறப்படுகின்றதாவது தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரப்பலியாகத் **தம்முடைய குமாரனை அனுப்பினதாலே வாசம் பண்ணும் எங்கள் தேவ பிதா இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி அவருடைய அன்பை எமக்கு வெளிப்படுத்தினார்.** மேலே **பரி.யோவான் 13:34**இல் **'இயேசுகிறிஸ்து எமக்கு நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கின்றேன்.'** என கூறுகின்றார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாக நாம் இவ்வுலகில் வாழ்கின்ற போது **எங்கள் கிரியைகள், மூலம் நாங்கள் அவரது பிள்ளைகள் என்பது வெளிப்பட வேண்டும்.** ஆகையால் அவர் எங்களை நேசிப்பது போல **நாமும் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும். எம்மை வெட்கப்படுத்துகின்ற, சிறுமைப்படுத்துகின்ற, துன்புறுத்துகின்ற யாராக இருப்பினும் நாம் அவர்களை மன்னித்து அன்பு செய்ய வேண்டும்.** ஏனென்றால் உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். என எமது இயேசுகிறிஸ்து **(பரி.மத்தேயு 6:44)** கற்பித்திருக்கிறார். ஆகையால் **இயேசுவின் அன்பை மற்ற மனிதர்கள் உங்களில் காண பூரண சற்குணராயிருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களுக்கு உங்கள் அன்பை வெளிப்படுத்தி நாங்கள் ஒருவரிலொருவர் அன்பு செய்ய கற்பித்து எங்களை ஆசீர்வதிக்கின்றபடியால் ஸ்தோத்திரம்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். --ஆமென்--

வேத வாக்குத்தத்தம்

"உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?..."
(பரி.மத்தேயு 5:46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
25 திங்கள்

கர்த்தர் செய்ய நினைத்தது ஒருநாளும் தடைபடாது!

வேதவாசிப்பு
1 பேதுரு
அதி: 04 - 05

**"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்."** (யோபு 42:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் வாழ்வில் புதிய வழிகள் திறக்கப்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் இன்றும் உங்களைப் நோக்கிய வண்ணமாகவே இருக்கிறார். இன்றைய நாளில் தேவன் உங்கள் வாழ்வில் உங்களைக் குறித்து வைத்துள்ள **அனைத்து திட்டங்களையும், யோசனைகளையும் தடைசெய்ய எந்தவொரு பூரணமான வல்லமை கொண்ட மனிதனும் இப்பூவுலகில் இல்லை-யென்பதை நினைத்து நாளை ஆரம்பியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் **யோபு 42:2**இல் **"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது" எனக் கூறுகின்றார்** எமது தேவன் சர்வ வல்லமையுடைய தேவனானவர். **ஏசாயா 55:11**இல் **"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"** என உரைக்கப்படுகின்றது. மனிதனின் தனது வாயின் வார்த்தைகளை அவனால் நிறைவேற்ற முடியாது அனைத்தும் பலனற்றுப் போய்விடும்.

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! 'உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்'** என **1 தெசலோனிக்கேயர் 5:24இல்** குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் உங்களைத் தேர்ந்தெடுத்த தேவன் உங்கள் வாழ்க்கையைக் குறித்த **உயர் திட்டங்களையும், யோசனைகளையும் நிறைவேற்றும் வேளை அவைகளை தடை செய்ய எந்தவொரு மனிதனாலும் முடியாதென்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துக் கொள்ளுங்கள்.** ஆகையால் மனிதனது நாவினால் உங்களைக் குறித்து என்ன கூறினாலும் அவனது வாயினால் புறப்படும் வசனங்ளினால் உங்கள் வாழ்விற்கு உரிமையாகுகின்ற ஆசீர்வாதங்களை தடை செய்ய அல்லது ஒரு போதும் நிறுத்த முடியாதென்பதை உங்கள் உள்ளத்தில் உறுதிக் கொள்ளுங்கள். ஆனாலும் **தேவனது அசீர்வாதங்களை உங்களில் தடை செய்ய முற்படுகின்ற சாத்தானை எதிர்த்து விழிப்புணர்ச்சியோடு இருங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னைக் குறித்து வைத்துள்ள யோசனைகள், திட்டங்கள் என்பவற்றை நிறுத்தவும், தடைசெய்யவும் யாராலும் முடியாதென்பதால் உமக்கு ஸ்தோத்திரம்! ஆனாலும் சாத்தானுக்கு விரோதமாக விழிப்புணர்ச்சியோடிருக்க உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்." (சங்கீதம் 33:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜுலை
26 செவ்வாய்

# நமக்காக மனதுருகும் தேவன்!

வேதவாசிப்பு
2 பேதுரு
அதி: 01 - 02

**"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்."**
(பரி.மத்தேயு 11:29)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கும் தேவனுக்குமிடையில் காணப்படும் தடுப்புச்சுவர் நீங்கி அவரைப் பற்றிக் கொள்ள வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து எம்மை அளவற்று நேசிக்கிறார். அவர் சிலுவை மரணத்தில் தன்னையே அர்ப்பணித்தது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாகவே. ஆகையால் **அவர் வாழ்க்கைப் பாதையின் இடையில் ஒரு போதும் எம்மைக் கைவிடமாட்டார்.**

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தைக் குறித்து மேற் கூறப்பட்ட தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளது. **அங்கே சொல்லப்பட்ட சாந்தம் என்பது உங்களுக்காக எல்லா வேளையிலும் அவர் கொள்ளும் இரக்கத்தைக் குறித்தே.** எல்லா சமயத்திலும் உங்களை மிகவும் நேசித்து உங்கள் வாழ்வில் நன்மையான காரியங்களே நடை பெறும்படியாக வாழ்த்தும் அன்பான தேவன் அவரே. அப்படியாக **மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்பது அவரது உள்ளத்தில் எந்தவித ஆடம்பரமும் இல்லை என்பதே.** நீங்கள் இன்றைய நாளில் துன்பங்கள், நோய்கள், பிரச்சினைகள் எனற **பலவிதமான நுகங்களுடன் தோளில் தனியே சுமந்து முன்னோக்கிச் செல்கையில் வாழ்க்கையில் விரக்தியுடன் கடந்து செல்கிறீர்களா?**

தேவ பிள்ளைகளே! **உங்கள் நுகத்தடியானது பாரமாக இருப்பதனால் மயக்கமுற்று, சோர்வுற்று இருக்கின்றீர்களா?** ஆனாலும் இயேசுகிறிஸ்து அண்மித்தவுடன் **அவர் உங்கள் நுகத்தடியை சுமந்து வாழ்க்கையில் விடுதலையையும், ஆறுதலையும், மனச்சந்தோஷத்தையும் பெற்றுத் தருவார்.** உங்களுக்காகவே தேவன் வாழ்வை அர்ப்பணித்த தேவன் என்பதால், நீங்கள் பிரச்சினைகள், வேதனைகள், துன்பங்கள் என்பவற்றால் இருக்கின்ற வேளை தேவனது உள்ளம் உருகுகின்றது. இன்றும் **உங்களை அவை அனைத்திலுமிருந்து விடுதலை பெறச் செய்து உங்களுக்கு சந்தோஷம், சமாதானம், சுகம் என்பவைகளால் கொடுக்கும் வரை அவருக்கு பொறுமை இல்லை.** ஆகையால் இவைகளைப் பெற்றுக் கொள்ள தேவனை அண்மித்து பற்றிக் கொள்ளுங்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! எனக்கு அன்புக் காட்டும்படியாக எனக்கு ஒத்தாசை நல்கும்படியாக உங்கள் குமாரனை எமக்கு அனுப்பினீர்கள். இன்றும் அவருக்கூடாக என் வாழ்வில் சந்தோஷம், சமாதானம், சுகம் பெற்றுத் தாருங்கள் இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,"
(பரி.மத்தேயு 9:36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
27 புதன்

# தேவனுடைய சமாதானத்தை பெற்றுக் கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு
2 பேதுரு 03
1 யோவான் 01

**“அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.”** (பிலிப்பியர் 4:7)

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! **விலையேறப்பெற்ற இயேசுவின் பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்பட்ட உங்களுக்கு இக்காலைப் பொழுதில் என் அன்பு வாழ்த்துக்கள்.** வானத்தையும், பூமியையும் படைத்து அங்குள்ள அனைத்தையும் ஆளுகை பண்ணுகின்ற **படைப்பின் தேவனின் பிள்ளைகளாகுவதற்கு கிடைத்தமை எமது அதிர்ஷ்டமே!** ஏனென்றால் நாங்கள் தேவனைத் தேர்ந்தெடுக்கவில்லை. அவரே எம்மை அழைத்துக் கொண்டார்.

தேவ பிள்ளைகளே! நாம் உலகை ஆளுகை பண்ணுகின்றவரின் சொந்த பிள்ளைகளாதலால் எவ்வளவு **அதிர்ஷ்டசாலிகளாவோம்!** இன்றும் **பிலிப்பியர் 4:7**இல் கூறுவது **‘தேவன் எமக்கு சமாதானத்தை அருளும் தேவன் என்றே.’** ஆனாலும் சாதாரண மனிதனின் வாழ்க்கையில் **அவன் சமாதானமாக வாழ வேண்டுமெனின் அவனது நிலை, சுற்றாடல் அவனது வாழ்வில் அனைத்து காரணங்களும் சுமுகமான நிலையில் காணப்படல் வேண்டும்.** இல்லாவிட்டால் மனிதனுக்கு இருதயத்தில் சமாதானம் இருக்காது, அவ்வேளைகளில் சமாதானம் பெற்றுக் கொள்ள பெரும்பாலான முயற்சிகளை மேற் கொள்வார்கள். ஆனாலும் **பிலிப்பியர் 4:7**இல் **‘தேவனது சமாதானமானது இயேசுகிறிஸ்துவுக்கூடாக நாம் பெற்றுக் கொள்வதேயாகும்.’ பரி.யோவான் 14:27**இல் தேவன் எமக்கு பொருத்தனை பண்ணியுள்ளதாவது **‘சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை.’ உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக எனக் கூறுகிறார்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் வாழ்வில் எவ்வளவு பிரச்சினை, கஷ்டங்கள், நோய்கள் எதிர் வந்தாலும் பயப்படாதீர்கள்!** உங்கள் தேவன் எப்போதும் உங்களோடு கூட இருக்கின்றாரென்பதை முழு உள்ளத்தோடு விசுவாசியுங்கள். அப்பொழுது தேவனின் சமாதானத்தை பெற்றுக் கொள்வீர்கள். அவைகளை திருடிக் கொள்ள எவருக்கும் இடமளியாதீர்கள். **ஒரு மனிதனுக்கும் உங்களால் சமாதானம் கொடுக்க முடியாதென்பதால் தேவனுக்குள் உங்கள் விசுவாசத்தை பெருக்கிக் கொள்ளுங்கள். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் எனக்கு சமாதானத்தைத் தருகின்ற தேவனாகையால் ஸ்தோத்தரிக்கின்றேன்! ஆனாலும் தினமும் நான் முகங் கொடுக்கும் பிரச்சினை, கஷ்டங்கள் காரணமாக என் சமாதானம் நீங்கிவிடாமல் என்னில் நிலைத்திருக்கச் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

“ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும்.” (ஏசாயா 48:18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

28 வியாழன்

## சத்துருக்களை கீழ்ப்படுத்தி நன்மையான எதிர்காலத்தை உருவாக்கும் தேவன்!

வேதவாசிப்பு

1 யோவான்

அதி: 02 - 03

**"உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன். இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்."**
(1 நாளாகமம் 17:10)

அன்புமிகு தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் கர்த்தரின் விஷேசித்த அபிஷேகத்தைப் பெற்றிருந்த தாவீதைப் போல் நீங்களும் அபிஷேகத்தினால் நிறைந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** தினமும் அதிகாலையில் தேவனின பாதத்திலிருப்போருக்கு தேவனின் கிருபையானது புதிதாகின்றபடியால் **இன்றும் நீங்கள் தேவனின் சமூகத்திலிருந்து அக்கிருபையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட வசனத்தில் **'நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் நியாயதிபதிகளைக் கட்டளையிட்ட நாள் முதல் நடந்தது போலவும், நியாயக் கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கவும் அவர்களை நாட்டினேன். உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன் இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்'** என்றாகும். இவையனைத்தையும் சொல்லும்படியாக நாத்தான் தீர்க்கதரிசிக்குக் கூறியது கர்த்தரே ஆகும். ஏனென்றால் தாவீது தனது மாளிகையில் இருக்கும் வேளை தேவனுக்காக ஒரு ஆலயம் கட்டுவதற்கு அவன் உள்ளத்தில் ஆவல் ஏற்பட்டது. அப்பொழுது நாத்தான் தீர்க்கதரிசி தாவீதை நோக்கி **'உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும் தேவன் உம்மோடு இருக்கிறார்** என்றான். **1நாளாகமம் 17:1**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் தேவ செய்தியானது **'நான் வாசம் பண்ணும்படியாக நீ எனக்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம் என்பதே.'** ஆனாலும் **1நாளாகமம் 17:10**இல் தேவன் தாவீது ராஜாவுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவதாகக் கூறுகின்றார். **'நீ உன் பிதாக்களிடத்திலே போக உன நாட்கள் நிறைவேறும் போது நான் உனக்குப் பின்பு உன் புத்திரரில் ஒருவனாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி அவன் இராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.'** அப்பொழுது தாவீது ராஜா கர்த்தருடைய சமூகத்திலிருந்து "தேவனாகிய கர்த்தாவே தேவரீர் என்னை இது வரைக்கும் கொண்டு வந்ததிற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம் என்றார்? அது போலவே நம்மை பரலோக இராஜ்யத்திற்கு உரிமையான பிள்ளைகளாக மேன்மையான சந்ததியாக எண்ணுகிறார். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் தாவீதின் தேவனைப் போன்றே என தேவனுமாக இருக்கின்றீர்கள். என் உள்ளத்தைப் பார்த்து நீங்கள் என் வாழ்வையும் ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்." (சங்கீதம் 147:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
29 வெள்ளி

# தேவனிடத்தில் வாஞ்சையாயிருந்து உயர்ந்த அடைக்கலத்தைப் பெறுங்கள்!

வேதவாசிப்பு
1 யோவான்
அதி: 04 – 05

**“அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.”** (சங்கீதம் 91:14)

அன்பார்ந்தவர்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று வெற்றிகரமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் பலவிதமான பிரச்சினைகள் மத்தியில் வாழ்கின்ற உங்களை அவை அனைத்திலுமிருந்து உங்களை மீட்டுக் கொள்ள **பரலோகத்தின் தேவனான நாம் இயேசுகிறிஸ்து இன்றும் உங்களோடிருக்கிறார்.** ஆகையால் எதிர்பார்ப்புக்களுடன் இன்றைய நாளை ஆரம்பியுங்கள்.

தேவ பிள்ளைகளே! மேலே **சங்கீதம் 91:14**இல் எழுதியிருப்பது **‘அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன் என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன்’** என்றாகும். இங்கு ஆத்மீக கருத்தானது தேவனை முழு உள்ளத்தோடு நேசிப்போர்கள் அவரது உள்ளத்திற்கு மிகச் சமீபமாக இருப்போர்க்கு எவ்வளவாக நெருக்கங்கள், உபத்திரவங்கள் ஏற்படும் வேளையில் அவர்களை விடுவிப்பார் என்றாகும். ஆனாலும் **நீங்கள் உலகளாவிய பெயர் கிறிஸ்தவ பிள்ளைகளாக வாழ்வீர்களெனின் உங்களுக்கு தேவனின் இரக்கத்தை உடனடியாக பெற முடியாது.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் **உங்களுக்கு எவ்வளவு நெருக்கங்கள், பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பயமற்று முகங் கொடுக்கவும் அவை அனைத்தின் மத்தியில் தேவன் பேரில் முழு உள்ளத்தோடு அன்பு செய்து தாழ்மையோடு நீங்கள் வாழ்வீர்களெனின் உண்மையிலேயே தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.** ஆகையால் நீங்கள் இயேசுவின் பேரில் மிக வைராக்கியமான விசுவாசங் கொள்ளுங்கள். என்றுமே அவரை விட்டு விலகாத உறுதியான விசுவாசத்தைக் கேளுங்கள். தேவன் இப்பூமியில் சகல ஜாதிகளின் மத்தியில் உங்களைத் தெரிந்து வேறுபடுத்திக் கொண்டது **அவரது நாமத்தை உங்களுக்கூடாக உயர்த்தும்படியாகவேயாகும். ஆகையால் தேவன் உங்களை ஒரு போதும் மறவார் என்பதையும் எப்போதும் நினைவிற் கொண்டுள்ளார் என்பதையும் விசுவாசியுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் எனது படைப்பின் தேவன் என்பதால் உங்களை வாஞ்சையோடு ஜெபத்திலே புத்திரசுவீகாரத்தின் ஆவியை பெற்றவர்க்களாக உம்மோடு இணைந்து ஜெபிக்க கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

“அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.” (சங்கீதம் 91:15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா

ஜூலை

30 சனி

## ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டு!

வேதவாசிப்பு

2 யோவான் 01
3 யோவான் 01

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு." (பிரசங்கி 3:1)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இத்தினம் சுபதினமாக அமைய வேண்டுமென இன்றைய நாளிலும் வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் உங்கள் காரியங்கள் யாவும் நிறைவேறி மனமகிழ்ச்சியுடன் **இத்தினத்தை சம்பூரணப்படுத்தும்படி கர்த்தர் உங்களுக்கு ஒத்தாசை புரிவார்.**

அன்பான தேவ பிள்ளைகளே! இன்றைய தினத்தின் பிரதான வசனத்தில் **பிரசங்கி 3:1**இல் வெளிப்படுத்துகிறது **'ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு'** என்பதாக. இதன் பிரகாரம் தேவனுடைய படைப்பை நோக்கிப் பார்ப்போமாகில் ஒரு சில தாவரங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவைகள் யாவும் உதிர்ந்து போய் மொட்டை மரங்களாக காட்சியளிக்கும். சில நாட்களின் மறுபடியும் இளந்துளிர்கள் துளிர்ந்து பசுமையாய் இருக்கும். **இப்படி வித்தியாசமான காலங்கள் தேவனால் நியமிக்கப்பட்டு பழவர்க்கங்கள், பூக்கள் அதிகமாக காணப்படும் காலங்கள் உண்டு.** அதே போல் மழைக்காலம் என மழை பொழியும் காலங்களும் நியமிக்கப்பட்டுள்ளன. சிருஷ்டிகர் தமது **இயற்கை படைப்புக்களை அவைகளுக்கென காலங்களை நியமித்து செயல்களை நடத்திக் கொண்டிருப்பவரேயானால், அவரது விசேஷித்த சிருஷ்டியான மனிதனைக் குறித்து அவனது வாழ்வினை கவனியாதிருப்பது எப்படி என சிந்தியுங்கள்?**

தேவனுடைய பிள்ளைகளே! காலங்களை உருவாக்கினவர் அதை மாற்ற அறியாதிருப்பவரோ? சமீபத்தில் தலாவக்கலை பிரதேசத்தில் ஒரு சுவிசேஷ கூட்டம் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கு மழைக்காலம் என்றாலும் தேவனை விசுவாசித்து கடந்து போனோம். **கூட்டம் முதல் நாளன்று மழை பெய்யத் தொடங்கிய போது நான் என் கைகளை வானத்தை நோக்கி உயர்த்தி தேவனை நோக்கி மழையை நிறுத்தி ஜனங்களை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபித்தேன். என் விண்ணப்பத்தை கேட்ட தேவன் அக்கணமே மழையை நிறுத்தி ஆராதனை வெற்றியுடன் செய்து முடிக்க கிருபையளித்தார்.** அதே போல் உங்கள் வாழ்விலும் கிருபை அளிக்க தேவனால் முடியாது போகுமா? விசுவாசத்தோடு உறுதியாய் பற்றிக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அன்பான இயேசுவே! சிருஷ்டிகரான நீங்கள் காலங்களையும், சமயங்களையும் நிர்மாணிக்க கர்த்தாவே என்னுடைய வாழ்க்கையையும் உம்முடைய சித்தத்தின்படி நிர்மாணித்து ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள்." (எரேமியா 31:16)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜீவ மன்னா
ஜூலை
31 ஞாயிறு

## தேவனும், ஆத்மீகப் பெற்றோரும்!

வேதவாசிப்பு
யூதா 01
வெளி. 01

**"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக."** (எபெசியர் 6:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மாதத்தின் **இறுதி நாளான இன்று இம்மாதம் முழுவதும் ஜெயத்துடன் எம்மை நடத்தின ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு நன்றி செலுத்தி, இன்றும் உங்களுக்கு நல்ல நாளே என வாழ்த்துகின்றேன்.** நீங்கள் ஓர் ஆத்மீக தகப்பனாகவோ, தாயாகவோ இருப்பீர்களெனில் இன்றைய பிரதான வேத வசனம் உங்களுக்கும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது. **பவுல் அடிகளார் எபேசுவிலே** இருக்கிற சபையோருக்கு கூறியதாகும். **இந்த வார்த்தை பிதாக்களே எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் தாய்மார்களுக்கும் பொருந்தும் என எண்ணுகிறேன்.**

தேவ பிள்ளைகளே! **எபேசியர் 6:4**இன்படி **ஆத்மீக பெற்றோர்கள் தம் பிள்ளைகளை ஆத்மீகத்தில் வளர்ப்பது அவசியம் என வலியுறுத்துகிறது. காரணமற்ற கோபத்தினால் பிள்ளைகளை கண்டித்து தண்டிப்பதினால் பிள்ளைகளுக்கு கோபத்தை உண்டு பண்ணும்.** அதனால் பவுல் அடிகளார் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் **'கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'** என குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் **நீதிமொழிகள் 3:11,12இல் 'என் மகனே நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துக் கொள்ளும் போது சோர்ந்து போகாதே தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைச் சிட்சித்தார்'** எனக் காணப்படுகிறது.

தேவ பிள்ளைகளே! **எம் பிள்ளைகளைக் குறித்து பெரிய திட்டங்களை வைத்துள்ளார். என் மனைவி இரு பெண்பிள்ளைகள் பெற்றதன் பின் எட்டு வருடங்களுக்குப் பிறகே என் மகன் பிறந்தார்.** இவ்வளவு தாமதமாய் ஒரு மகன் பிறந்தது ஏன் என்று அன்று நாம் அறியவில்லை. இன்று அவர் வாலிபனாய் இருப்பதால் **என் ஊழியத்தில் மிக உதவியாக என்னோடு இணைந்து செயல்படுவதைக் காணும் போது தேவனின் திட்டம் எவ்வளவு உயர்ந்தது என அறிய கூடியதாய் இருக்கிறது.** பெற்றோருக்கு தம் பிள்ளைகளின் பிடிவாதமான செயல்கள் மூலம் வேதனை, கோபம் ஏற்படலாம் ஆயினும் உலக பெற்றோரை போல் அல்லாது ஆண்டவருக்குள் அவர்களுக்கு புத்திமதிகளை கூறி தேவ வார்த்தைகளுக்கூடாய் வழி நடத்த வேண்டும் **தேவனுடைய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியது மிக முக்கியமாகும். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் பரலோகப் பிதாவே! உங்கள் தேவ வார்த்தைகளுக்கூடாய் எம்மை ஆத்துமாவிலே பெலப்படுத்தி உமக்கு பிரியமானபடி பெற்றோருக்கு கீழ்படிந்து வாழவும், பெற்றோர்கள் தேவ உபதேசத்தின் பிரகாரம் பிள்ளைகளை வளர்க்கவும் கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்." (நீதிமொழிகள் 13:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையினரோடும், ஊழியர்களோடும் இரவு பகலாக ஜெபித்து வருகின்றேன்.



அன்பார்ந்தவர்களே! தேவ வசனத்தின்படி சர்வ பராக்கிரமுள்ள தேவனின் கோபம் தேசத்தின் மேல் பற்றியதன் காரணமாக அல்லது வெவ்வேறு காரணங்களினால் நிகழ்ந்ததெனினும் நாம் மிகவும் வேதனையடைகிறோம். வேதாகமத்தை நாம் வாசிக்கின்ற போது, தேசம் மனம் திரும்புகிற வேளையில் தேவன் மனதுருகி முழு தேசத்திற்கும் அவர்களின் சொந்த வாழ்க்கைக்கும் நன்மையான காரியங்களை நிறைவேற்றுவேன் என தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் தேசத்தில் ஜனங்கள் மனந்திரும்புவதன் நிமித்தம் அவர்களின் வாழ்வு நன்மையான வழிக்கு வருவதோடு ஆசீர்வதிக்கப்படும். எங்கள் தேசத்திற்காகவும், ஆத்மீக எழுப்புதலின் நிமித்தமும் தேவ சபைகளில் இரவு, பகலாக ஜெபங்கள் இடைவிடாது ஏறெடுக்கப்பட்டது என்பதை மறக்கலாகாது. ஆகையால் இந்நிகழ்வுகளின் போது உயிரிழப்புக்கள் குறைவாக ஏற்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது. சுமார் 2 இலட்சம் ஜனங்கள் இருப்பிடங்களை மாத்திரமே இழந்துள்ளதோடு அதிகமான உயிர்கள் தேவனால் பாதுகாக்கப்பட்டதனால் தேவனுக்கே ஸ்தோத்திரம்!

அன்பான ஜீவ மன்னா தினமஞ்சரி வாசகர்களே! தேசத்திற்காக எதிர் காலத்திலும் இடைவிடாது முடிந்த அளவு ஜெபியுங்கள். அது எங்கள் அனைவரினதும் தலையாய கடமையாகும். தேசத்திற்குள் அக்கிரமங்களும், பாவங்களும் பெருகுகின்ற போது தேவன் இயற்கை நிகழ்வுகளுக்கூடாக இப்படியாக பேசுகின்ற போது சில வேளைகளில் தேசத்தினுள் இழப்புகள் நேரிடலாம். ஆனாலும் சிருஷ்டித்த தேவன் தேசத்தின் ஜனங்கள் மனந்திரும்பும் வரை தேசத்தை நோக்கிப் பார்த்த வண்ணமாக இருக்கிறார் என வசனம் கூறுகின்றது. நீங்களும் தேசத்திற்காக உங்களின் கடமையை நிறைவேற்ற தீவிரமாய் செயற்படுங்கள்.



* யோனா 3:10 - "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்."



* எசேக்கியேல் 18:32 - "மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

*சங்கீதம் 22:24 - "உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்."


**இலங்கையரே மனந்திரும்புங்கள்! வாழ்வை பரிசுத்தப்படுத்துங்கள்!**

போதகர் ஏ.ஜே.ஜோசப்

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு கைவிடார் திருச்சபைக்கு செல்லும் வீதியின் வரைப்படம்.




## எங்களுடைய கணனி ஒளிபரப்பில் தொடர்பு கொள்வதற்கு...

Apple லும் Android கையடக்க தொலை பேசியின் டெப் வழியாக ustream App Download செய்து jesusnf மூலம் search செய்யுங்கள்.

**Google.com » ustream.tv » jesusnf » jesusnf (click)**

## இடைவிடாமல் உங்கள் ஜீவ மன்னா தின மஞ்சரியை பெற்றுக் கொள்ள வாசகக் கட்டணங்கள், காணிக்கைகள், சந்தோஷ காணிக்கைகளை எமக்கு தவறாது அனுப்பி வையுங்கள்!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி,
கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு
பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
**விலாசத்தை அனுப்பவும்** R/N: QD/57/NEWS/2016


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய. (பழைய டொயோடா நிறுவனக் கட்டிடம்).
011-2437189 011-2334865 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org



இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, [illegible] பிரிண்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org